
பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 06 வியாழக்கிழமை (22-08-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:268





திருகோணமலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலவரத்தின்போது கலவரக் கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி சின்னாபின்னப்பட்டுக் கிடக்கும் ஓட்டோ ஒன்றையும், யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ படைப் பிரிவினரை ஏற்றிச் சென்ற வான், தாக்குதலுக்கு இலக்காகி கண்ணாடிகள் நொறுங்கிப் போன நிலையில் காட்சியளிப்பதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள் எஸ்.எஸ்.ஆர்)*

# திருகோணமலை கண்காட்சி அடிதடி, ரகளையில் முடிவு!

## 27பேர் காயம்! 18பேர் கைது!!

திருகோணமலை,ஓகஸ்ட்22

**திருகோணமலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'யுகதக்ம' கண்காட்சியின் இறுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி பெரும் அடிதடி, ரகளையில் கலவரமாக முடிவுற்றது. அடிதடி, மோதல், வெட்டுக் குத்து ஆகியவற்றில் 27பேர் காயமடைந்தனர். பல பஸ்கள், மினிபஸ்கள், வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இச்சம்பவங்கள் தொடர்பாக 18 பேரைக் கைதுசெய்திருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.**

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

'யுகதக்ம' கண்காட்சியின் - 5ஆம் நாள் - இறுதி நாள் - நிகழ்வில் நேற்று முன்தினம் இரவு திருகோணமலை விளையாட்டு அரங்கில் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. அங்கு தொடர்ந்து இரு மணி நேரமாக சிங்களப் பாடல்களே இசைக்கப்பட்டதால் தமிழ்ப் பாடல் பாடும்படி இசைக் குழுவினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதையடுத்து இரண்டு தமிழ்ப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

உடனே 'தொடர்ந்து தமிழ்ப் பாடல்களைப் பாடவேண்டாம்' என்று கூக்குரல் கிளம்பியது. அப்படிக் கூக்குரலிட்ட கோஷ்டி அரங்கிற்குள் கற்களை வீசி எறிந்தது.

அதேசமயம், இளைஞர்கள் சிலர் அந்தக் கோஷ்டியினரால் தாக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென்கிழக்கு பல்கலையில் நேற்றிரவு திடீர் தீ விபத்து!

### மூன்று கட்டடங்கள் எரிந்து நாசம்

**- அம்பாறைச் செய்தியாளர் ஏ.எல்.எம்.சலீம் -**

அம்பாறை,ஓக.22

ஒலுவிலில் உள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்றிரவு 7 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் மூன்று கட்டடங்கள் எரிந்து நாசமாகின; நூற்றுக்கு மேற்பட்ட கணனிகளும் தீயில் பொசுங்கின. பல்கலைக்கழகத்தின் கணனிப் பிரிவில் திடீரென ஏற்பட்ட தீ, புவியியற் பிரிவு, பல்துறை விரிவுரையாளர் மண்டபங்களுக்கும் பரவியது.

விடுதி மாணவர்கள், விமானப் படையினர், அதிரடிப்படையினர் மற்றும் பொதுமக்கள் ஒன்றரை மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இத்தீவிபத்தால் கணனிப்பிரிவு, புவியியல் பிரிவு, பல்துறை விரிவுரையாளர் மண்டபம் ஆகியன அமைந்திருந்த மூன்று கட்டடங்கள் எரிந்து நாசமாகின.

அங்கிருந்த நூற்றுக்கு மேற்பட்ட கணனிகள் மற்றும் உடைமைகள் தீயில் பொசுங்கி அழிந்தன.

தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட 40இற்கு மேற்பட்ட மாணவர்கள் மூச்சுத் திணறிய நிலையில் நிந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் உறுப்பினர்களைத் தாக்கிய வரதன்குழு உறுப்பினர் மூவர் கைதாகி விளக்கமறியலில்

மட்டக்களப்பு,ஓக.22

மட்டு ஆரையம்பதி பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை அடித்துத் தாக்கியது, மிரட்டியது ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசேட அதிரடிப்படையுடன் இணைந்து செயற்படும் வரதன் அணி என்ற ஆயுதக்குழு உறுப்பினர்கள் மூவரை காத்தான்குடிப் பொலீஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

மூவரையும் எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட தர்ஷன் (ரி.ஆர்.எல்.பிரியதர்சன்), குட்டி (ரி.சிங்கராசா), திலக் (எஸ்.திலகேஸ்வர்) ஆகியோரே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களாவர்.

தமது உறுப்பினர்கள் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசிகன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தமை தெரிந்ததே.

ரெலோ அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட குழு ஒன்றே வரதன் அணி என்ற பெயரில் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம)





தமிழ்ப்பாட்டுக் கேட்டதற்கே இந்தத் தர்ம அடியென்றால் இடைக்கால நிர்வாகம் அது இது என்று கதைத்தால் கதி என்னாகுமோ..?

## அமெ.பிரதி ராஜாங்க அமைச்சர் இன்று காலை யாழ்.வருகின்றார்

கொழும்பு,ஓக.22

அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆமிடேஜ் ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று காலை இலங்கை வருகிறார்.

காலை 930 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் அவர், அங்கிருந்து விமானப்படை ஹெலிமூலம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார். பாதுகாப்பு முன்னரங்க நிலைகளை அவர் பார்வையிடவிருக்கிறார்.

இவர்களுடன் பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்தமொறகொட மற்றும் முப்படைத் தளபதிகள் ஆகியோரும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்குடாநாட்டில் மிதி வெடிகளை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் எம்.பிக்கள் இன்று யாழ்.விஜயம்!

இலங்கைக்கு வருகை தந்திருக்கும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்.

யாழ்ப்பாண நிலைமைகளை நேரில் அறிந்து கொள்வதற்காக வரும் இக்குழுவினர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள, படை அதிகாரிகள், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் ஆகியோரைச் சந்திப்பர்.

பிரிட்டிஷ் எம்பிக்கள் குழு நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தியுளளது. இச்சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டார். (ம)

## மறியற்போர் ஒத்திவைப்பு

ஊர்காவற்றுறை,ஓக.22

ஊர்காவற்றுறை பனை - தென்னைவள கூட்டுறவுச் சங்கத்தின் நாரந்தனைக் கிளை முகாமையாளர் மற்றும் பணியாளர் கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நாளை நடத்தப்படவிருந்த மறியற் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் கடற்படையின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி றெஜி பெரேராவுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் சம்பந்தப்பட்ட கடற்படையினர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

காயமடைந்த சங்கப் பணியாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டும் 18ஆவது அரசமைப்புத் திருத்தம் அமைச்சரவை நேற்று ஆராய்வு

கொழும்பு,ஓக.22

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டுவது சம்பந்தமான 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருவது குறித்து அமைச்சரவை நேற்று விரிவாக ஆராய்ந்ததாக அறியவந்தது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்குபற்றவில்லை. அவர் லண்டன் சென்றுள்ளார்.

எனினும் அமைச்சரவைக் கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் தவிர்ந்த வேறு எவையும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படக்கூடாது என்ற கண்டிப்பான பணிப்புரை ஒன்றை தமது செயலாளர் ஊடாக அமைச்சரவைச் செயலாளருக்கு அனுப்பிவிட்டே ஜனாதிபதி லண்டன் புறப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியின் பணிப்புரை குறித்து ஆராய்ந்த அமைச்சரவை, அதனை ஒதுக்கித் தள்ளிவிட்டு 18ஆவது அரசமைப்புத் திருத்தம் குறித்து விரிவாக ஆராய்ந்தது எனத் தெரியவந்தது.(ம)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## மொரோக்கோ கிண்ணம் இலங்கையின் கைகளில்!

மோரோக்கோவில் பாகிஸ்தான், இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளிடையே நடைபெற்ற முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இலங்கை அணி வெற்றிபெற்றது.



இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் 27 ஓட்டங்களால் இலங்கை அணி வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சனத் ஜெயசூரியா 71 பந்துகளில் 10 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 71 ஓட்டங்களை விளாசினார். அத்தப்பத்து 25ஓட்டங்களையும், குமார் சங்ககார, அரவிந்த டி சில்வா ஆகியோர் முறையே 40, 33 ஓட்டங்கையும் பெற்றனர்.

இறுதியில் களமிறங்கிய சமிந்த வாஸ் 18 பந்துகளில் 18 ஓட்டங்களையும் முரளிதரன் 16 பந்துகளில் 11 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

50 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 235 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணியின் முன்வரிசை வீரர்களின் ஆட்டம் சோபிக்கவில்லை. தனது முதலாவது விக்கெட்டை 7 ஓட்டங்கள் பெற்ற நிலையில் இழந்தது அந்த அணி. தொடர்ந்து சீரான இடைவெளியில் அந்த அணியின் விக்கெட்டுக்கள் சரிந்தன. ஒரு நிலையில் வெறும் 91 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்திருந்தது அந்த அணி.

இந்த நிலையில் 7 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த, விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர் மற்றும் டிப் பென்னர் ஆகியோர் நின்று நிதானமாக ஆடி, அணியின் ஓட்ட எண்ணிக்கையை தூக்கி நிறுத்தினர்.

இருவரும் அடுத்தடுத்து தமது அரைச் சதங்களைப் பூர்த்தி செய்தனர். அவர்களது அபாரமான துடுப்பாட்டம் காரணமாக ஆட்டம் விறுவிறுப்படைய ஆரம்பித்தது.

53 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டிப் பென்னர் ஆட்டமிழந்தார். அதனையடுத்து ஆட்டம் மீண்டும் இலங்கை அணியின் பக்கம் சாய ஆரம்பித்தது. குறுகிய இடைவெளியில் ஏனைய மூன்று விக்கெட்டுக்களும் வீழந்தன. மார் பௌச்சர் 65 பந்துகளில் 4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 70 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 48.3ஆவது ஓவரில் ஆட்டமிழந்ததுடன் தென்னாபிரிக்காவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. 208 ஓட்டங்களுக்கு அந்த அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

27 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றிபெற்றது.

கலிஸ், டொனால்ட், போஜே, வாஸ், முரளிதரன், குணரத்ன ஆகியோர் தத்தம் அணி சார்பில் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இறுதிஆட்ட நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் இலங்கை அணித் தலைவர் சனத் ஜெயசூரியா தெரிவானார். (ம)

# சமாதான முயற்சிகள் நிச்சயம் வெற்றிபெறும்

## யாழ். வந்த மரக்கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.22

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் இதயசுத்தியுடன் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகள் நிச்சயம் வெற்றியளிக்கும்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திருமதி ரேணுகா ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டில் நிரந்தர அமைதி நிலவ வேண்டும் என்பதற்காகவே அனைவரும் பாடுபட்டு வருகின்றோம். அந்த அமைதி விரைவில் ஏற்படும் என்ற நம்பிக்கை ஐ.தே.கட்சியின் மத்திய குழு உறுப்பினர் என்ற முறையில் எனக்கு நிறையவே உண்டு.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி சில விடயங்களை அமைச்சர்களிடம் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். அதாவது வடபகுதிக்குச் சென்று அங்குள்ள மக்களின் பிரச்சினைகளை நேரில் கண்டறியுங்கள். அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முயலுங்கள். அந்த மக்களின் மனங்களை வெல்லுங்கள் என்பதே அவையாகும். அந்த வார்த்தையின் பொருளை உணர்ந்து அதன்படி செயலாற்றவே நான் இங்கு வருகை தந்துள்ளேன்.

நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மரக்கூட்டுத்தாபனங்கள் போன்று இங்குள்ள மரக்கூட்டுத்தாபனத்தையும் நல்லபடி செயற்படவைக்க வேண்டும் என்பதே எனது எண்ணமாக உள்ளது. அதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் தமது ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

கடந்த காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் 14 மர விற்பனை நிலையங்கள் இருந்தன. தற்பொழுது ஒரு நிலையம் மட்டுமே உள்ளது. ஏனைய 13 விற்பனை நிலையங்களையும் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஆலோசித்து வருகிறேன். அவற்றை ஆரம்பித்தால் தென்பகுதியில் இருந்து மரக் குற்றிகளையும் அரிந்த மரங்களையும் எடுத்துவந்து, இங்குள்ள மக்களுக்கு வழங்கமுடியும். அத்துடன் மரங்கள் அழிக்கப்படுவதையும் ஓரளவுக்குக் குறைக்கமுடியும் என நம்புகிறேன்.



மக்களின் விறகுப் பாவனையைக் குறைக்கும் நோக்குடன் மரக்கரியைப் பயன்படுத்தும் அடுப்பையும இங்கு விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளோம். பரீட்சார்த்தமாக அடுப்பையும் மரக்கரியையும் தென்பகுதியில் இருந்து எடுத்துவருவதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவுள்ளோம்.

தற்பொழுது பாலை, முதிரை மற்றும் யாவறணை மரங்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அவை மிகவும் குறைவாகவே உள்ளன. அவ்வாறு உள்ள மரங்களை இங்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். ஏனெனில் இங்குள்ள மக்கள் தமது கட்டடத்தேவைகளுக்கு அவற்றையே பயன்படுத்துகிறார்கள். ஆனால், அந்த மக்கள் ஏனைய மரங்களையும் தமது தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கு முன்வரவேண்டும். அவ்வாறு முன்வந்தால் எதிர்காலத்தில் பாலை, முதிரை என்ற வித்தியாசம் இல்லாது மரங்களைப் பயன்படுத்தலாம். யுத்தத்தின் காரணமாக அழிவுற்ற மரங்களை மீண்டும் உருவாக்குவதற்காக நாம் மரக்கன்றுகளை 5ரூபாயப்படி வழங்க முன்வந்துள்ளோம். மக்களும் பொது அமைப்புக்களும் அவற்றை வாங்கி நடுவதன் மூலம் எதிர்காலத்தில் மரவளத்தை மேம்படுத்தலாம். இங்கு வனத் திணைக்களம் மண்டும் செயற்பட ஆரம்பித்தால் மரங்கள் நடுவதை மேலும் ஊக்குவிக்கமுடியும் - என்றார்.

இந்தச் சந்திப்பில் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த டி.எஸ்.சமரக்கோன் (பொறியியலாளர்), எஸ்.வி.ஆரியரத்ன (பொது முகாமையாளர்), திருமதி கே. குருஹிட்ட பண்டார(சட்ட உத்தியோகத்தர்), ரி.டி.செனிவிரட்ண(உதவிப் பொது முகாமையாளர் மற்றும் வடபிராந்திய முகாமையாளர் க.விஜயரட்ணம், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட வனவளப் பொறுப்பாளர் லக்ஸ்மன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பின்னர் இக்குழுவினர் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள மரக்கூட்டுத்தாபனத்தின் மரக்கன்றுகள் உற்பத்தி மையத்திற்குச் சென்று பார்வையிட்டனர்.

பிற்பகல் 3 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெற்ற பிரதேச செயலர்களுடனான கூட்டத்திலும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கு மரங்களை எடுத்து வருவது தொடர்பாகவும் இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலதிக அரச அதிபர் தி.பத்தினியம்மா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதேசசெயலர்கள், மரக்கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ம-8-10)

### 17 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட்:

## யாழ். மாவட்ட அணிக்கு நேற்று மூன்றாவது வெற்றி

### செல்வின் லொயிட் 101 ஓட்டங்களைக் குவித்தார்

யாழ்ப்பாணம்,ஓக.22

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை 17 வயதுக்குட்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று மாத்தளை நாவுல சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி 173 ஓட்டங்களால் வவுனியா மாவட்ட அணியைத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்.அணி வீரர் ஜி.செல்வின் லொயிட் அபாரமாக ஆடி 101 ஓட்டங்களைப் பெற்றார். கிருஷ்ணசந்திரா, றொஹான், ரஜீவ்குமார், வினோதன், ஜங்கரன் ஆகியோர் முறையே 36, 22,17,16,11 ஓட்டங்களைப் பெற்றனர்.

வவுனியா அணி வீரர்களான வினோத்குமார் 32 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் கங்காதரன் 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கேதீஸ் 53 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய வவுனியா அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களை மட்டும பெற்றது. இதில் ரட்ணகுமார் 39 ஓட்டங்களையும், ஜனகன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்.அணி வீரர்களான ரஜீவ்குமார் 12 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் கிருஷ்ணசந்திரா 11 ஓட்டங்களுக்கும் லொயிட் 15 ஓட்டங்களுக்கும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வினோதன் 11 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

யாழ்.அணி மட்டக்களப்பு அணியுடன் இன்று மோதுகின்றது. (ம-3)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஓக.22

வவுனியா மாவட்டத்தில் இருந்து வருகை தந்துள்ள வடதாரகை விளையாட்டுக்கழகத்திற்கும் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையேயான துடுப்பாட்டப்போட்டி இன்று காலை 9.00 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில்இடம்பெறவுள்ளது. (ம-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஓக.22

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அரியாலை காந்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை காந்தி விளையாட்டுகழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விபரம் வருமாறு

பிற்பகல் 3.30 மணி - கைதடி வளர்மதி வி.க. எதிர் உடுவில் ஆலடி சிந்து வி.க.

மாலை 4.30 மணி - இணுவில் கலா வி.க. எதிர் மானிப்பாய் கட்டுடை வி.க. (ம-ரி-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.22

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் ஜே.டி.சி.ஏ. வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் வி.க. அணியும் தெல்லிப்பழை கிராஸ்கொப்பர் வி.க.அணியும் மோதுகின்றன. (ம-3)

## நல்லைக்கந்தன் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,ஓக.22

நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி ஆலயச் சூழலில் இடம்பெற்றுவரும் நிகழ்ச்சிகளில் இன்று நடைபெறவுள்ள நிகழ்வுகள் வருமாறு:-

★ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அதிகாலை 5மணிக்கு திருமுறை வீதி பஜனையும், குரு மூர்த்த ஆலயத்தில் விசேட தீபாராதனை வழிபாடுகளும் நடைபெற்று காலை 9 மணிக்கு சமயதீட்சை வழங்கப்படும். தொடர்ந்து புராணபடனம் நடைபெறும்.

★ இளங்கலைஞர் மன்றம் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் 10 ஆம் நாள் இசை ஆராதனை நிகழ்வில் மாலை 6.30 மணிக்கு எஸ்.குமாரசாமியின் பாட்டுக்கச்சேரி, வயலின் - ஏ. ஜெயராமன், மிருதங்கம் - கண்ணதாசன், முகர்சிங் - வி.ரமணன், தபேலா - சதாவேல்மாறன், கடம் - எம்.கஜன்.

★ வடபிராந்திய இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் இடம்பெறும் தெய்வீக இசைச் சொற்பொழிவில் மாலை 6 மணிக்கு 'சைவத் திருமுறைகள்' என்ற தலைப்பில் சைவப் புலவர் க.திருஞானசம்பந்தப்பிள்ளையின் உரை இடம்பெறும்.

★ நல்லூர் சைவ மகா சபையினரால் நல்லூர் மேற்கு வீதி முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் மாலை 5.45 மணிக்கு 'பாரதவம்சம்' என்ற தலைப்பில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ வை.நித்தியானந்த சர்மா கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

(ம-ரி-86)

### புற்றுநோயாளர்களை பராமரிப்பது குறித்து ஆராய

## பிரிட்டிஷ் டாக்டர்கள் குழு நேற்று யாழ்ப்பாணம் வந்தது

பிரிட்டனின் 'கான்' அமைப்பைச் சேர்ந்த (கான்சர் எய்ட் வடக்குக் கிழக்கு - CANE) டாக்டர்கள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர்களைப் பராமரிப்பதற்கான அமைப்பு ஒன்றை இங்கு ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயவே இக்குழு வருகைதந்துள்ளது.

இந்த அமைப்பானது புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மேற்படி நோயாளர்களை அரவணைப்பதுடன் அவர்களது குடும்பத்துக்கும் தனது ஆதரவை வழங்கவுள்ளது.

நோயாளர்களைப் பராமரிக்கும் பிரிட்டனின் கொஸ்பிஸ்(Hospice) தனியார் நிறுவனங்கள் போன்ற அமைப்புக்களை இங்கு ஆரம்பிப்பது குறித்து ஆராயவே இந்தக் குழுவினர் இங்கு வந்துள்ளனர். அந்த அமைப்பை ஆரப்பிப்பதற்கான நிதியை 'கான்' அமைப்பு வழங்கவுள்ளது.

இக்குழுவில் டாக்டர்களான திருமதி எஸ்.இந்திரசேனன், எஸ்.தங்கராஜா ஆகிய இருவரும் அடங்கியுள்ளனர். (ம-8-10)

### அமைச்சர் ஆறுமுகனின் மைத்துனரின்

## கொலைச் சந்தேக நபரும் மற்றொருவரும் சுட்டுக்கொலை!

கொழும்பு,ஓக.22

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மைத்துனரான நிரஞ்சனின் படுகொலை தொடர்பான முக்கிய சந்தேகநபர் உட்பட இருவர் நேற்றுப் படுகொலை செய்யப்பட்டனர்.

ஒரு வருடத்திற்கு முன்னர் கொழும்பு 'கோல்வ்' திடலில் நடைபெற்ற தமிழ்வர்த்தகரின் கொலையில் சம்பந்தப்பட்டவரே இண்டாவது நபர் எனக் கூறுப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனான இவ்விருவரதும் சடலங்கள் ராஜகிரிய, மொரகாஹேனப் பகுதியில் நேற்று முற்பகல் பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டன.

தோட்ட உரிமையாளரான நிரஞ்சன் அண்மையில் கொள்ளுப்பிட்டிப் பகுதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டது. தெரிந்ததே.

பூண்டுலோயாவைச் சேர்ந்த வர்த்தகரானா புஷ்பராஜ் என்பவரே நேற்று சுட்டுக்கொல்லப்பட்ட முக்கிய சந்தேக நபர் ஆவார். ராஜகிரிய, பண்டாரநாயக்கபுரத்தைச் சேர்ந்த சனத்குமார் என்பவரே இரண்டாவது நபர் என்று அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

இவ்விரு கொலைகள் குறித்தும் நுகேகொட பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.(ம)

## குப்பையை எரித்தபோது சீறிய சன்னத்தால் காயம்

எரிக்கப்பட்ட குப்பைக்குள்ளிருந்து சீறிப் பாய்ந்துவந்த துப்பாக்கி ரவை அங்கு வீதித் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட தொழிலாளியின் தொடைப் பகுதியைக் காயப்படுத்திய சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த வடிவேலு இலட்சுமணன் (வயது 46) என்பவரே இதில் காயமடைந்தவராவார். அவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்று வருகிறார்.

இப்பகுதியில் மீளக்குடியமர்வுக்காக வளவு துப்புரவுசெய்யும்போது துப்பாக்கி ரவைகள் காணப்பட்டால் அவற்றை வீதியில் குப்பைக்குள் போடவேண்டாமெனப் படையினர் துண்டுப் பிரசுரம் மூலம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-117)

### எவராக இருந்தாலும் ஒரே தீர்ப்புத்தான்

# சபை சம்பிரதாயங்களை மீறுபவர்கள் அமர்விலிருந்து இனி வெளியேற்றப்படுவர்

## சபாநாயகர் எச்சரிக்கை

நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் ஒழுங்குவிதிகளையும் மீறுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சபை நிகழ்வுகளில் இருந்து வெளியேற்றப்படுவர். பார்வையாளர் மாடத்தில் இருக்கும் பாடசாலை மாணவர்களும், வெளிநாட்டவர்களும் உங்களை மதிக்கும்படி நடந்துகொள்ளுங்கள் என சபாநாயகர் நேற்றுமுன்தினம் சபையில் கடுமையாக எச்சரிக்கை ஒன்றை விடுத்தார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மீதான அவநம்பிக்கைப் பிரேரணை மீதான விவாதம் இரண்டாவது நாளாக நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இரண்டாவது நாள் விவாதம் சற்று சூடுபிடித்துக் காணப்பட்டது.

சபாநாயகர் மைக்கல் ஜோசப் பெரேரா தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது. வழமையான கேள்வி - பதில்களின்பின் தினப் பணிகள் ஆரம்பமாகின.

இவ்வேளையில், சபாநாயகரின் அனுமதியுடன் நிமால் சிறிபால டி சில்வா சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை முன்வைத்தார்.

நாடாளுமன்ற அமர்வுகள் தொடர்பான ஒளிப்பதிவு நாடாளுமன்றத்தினதோ, சபாநாயகரினதோ அனுமதி இன்றி ஐ.தே.கட்சிப் பொதுச் செயலாளருக்கு எப்படிக் கிடைத்தது? இதைக் கடத்திச் சென்று கொடுத்தவர்கள் யார்? இந்த ஒளிநாடா எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் அதி உயர்பீடம் நாடாளுமன்றமே. இங்கிருந்து இரகசிய ஆவணங்கள் கடத்தப்படுவது சாதாரண விடயம் அல்ல. அது நாட்டின் இறைமைக்கு மட்டுமல்ல,


நாடாளுமன்றத்திலிருந்து...

பாதுகாப்பிற்கே ஓர் அச்சுறுத்தலாகும். இவ்விடயம் தொடர்பாக சபாநாயகர் பரிசீலனை செய்யவேண்டும் என நிமால் சிறிபால டி சில்வா சிறப்புரிமைப் பிரச்சினையைச் சமர்ப்பித்துப் பேசினார்.

இவ்விடயம் தொடர்பாக உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு ஆவன செய்யப்படும் என சபாநாயகர் உறுதியளித்தார்.

இவ்வேளையில், பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தூதுக்குழுவினர் சபாநாயகர் மாடத்தில் வந்து அமர்ந்தனர். படைக்கல சேவிதர் இக்குழுவினரை அழைத்து வந்தார்.

அவர்களை வரவேற்று கௌரவிப்பதாக சபையில் சபாநாயகர் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகளின் சார்பில் இரத்தினபுரி மாவட்ட எம்.பியான டபிள்யூ.டி.ஜோன் செனவிரத்ன - இரண்டாம் நாள் - விவாதத்தை ஆரம்பித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் தேர்தலின்பின் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை அவர் பட்டியல் போட்டுக் காட்டினார். இதனை அதே மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் புஞ்சி நிலமே உட்பட பலரும் மறுத்தனர். அவரது பேச்சுக்கு இடையூறு விளைவித்தனர்.

அதேபோன்று ஆளும் கட்சியின் சார்பில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகள், வன்முறைச் சம்பவங்கள் பற்றி விளக்கினார். அப்போது எதிரணியினர் பக்கம் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது. ஆளும் கட்சியினரும் சளைத்தவர்கள் அல்லா என்பதைக் காட்டினர். சபையில் உறுப்பினர்கள் பேசியதை விட "ஓடர் பிளீஸ்", "ஓடர் பிளீஸ்" என்ற சபாபீடத்தின் குரல்தான் கூடுதலாக ஒலித்தது.

மதிய உணவு இடைவேளையின் பின் சபை மேலும் சூடுபிடிக்க ஆரம்பித்தது.

ஜே.வி.பி. உறுப்பினரான நிஹால கலப்பதி பேசும்போது, அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் குடியுரிமையைப் பறித்து நாடுகடத்தவேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த வேளையிலேயே ஆளும்தரப்பினர் மத்தியில் கடுமையான கொந்தளிப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து கண்டி மாவட்ட எம்.பியான மஹிந்தானந்த அளுத்கமகே பேசும்போது - ஆளும் கட்சியினால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளையும், எரிக்கப்பட்ட வீடுகளையும் சூறையாடப்பட்ட கடைகளையும் புகைப்படங்களுடன் காட்டினார். இந்தச் சந்தர்ப்பத்தில் கண்டி மாவட்ட எம்.பியும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான ஏ.ஆர்.எம்.ஏ. காதருக்கும் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது. சபாநாயகரின் உத்தரவுகளையும் அவர்கள் மதிக்கவில்லை. 'கழுதை, நரி, மடையன்' என்ற வார்த்தைகள்கூட அடிக்கடி பிரயோகிக்கப்பட்டன.

இதனால் ஆத்திரமடைந்த சபாநாயகர் அமைச்சர் காதரைப் பார்த்து 'நீங்கள் ஓர் அமைச்சர். அதற்குத் தகுந்த முறையில் நடந்துகொள்ளவேண்டும். சபை ஒழுங்கை மீறுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சபையில் இருந்து வெளியேற்றப்படுவர். ஒழுங்குப்பிரச்சினை என்றால் முறைப்படி கூறலாம். அது ஏற்றுக்கொள்ளப்படும். அமைச்சர்கள் பதில் அளிக்கலாம். சபையைச் சந்தையாக்கக் கூடாது. எனக்கு உள்ள அதிகாரம் என்ன தெரியுமா? என்றார் சபாநாயகர். அப்போது ஒரு குரல் 'தெரியாது' என்று ஒலித்தது.

எதிரணி உறுப்பினர் 'இவர் எட்டாம் வகுப்பு மட்டுமே படித்தவர். இவருக்கு நாடாளுமன்ற சம்பிரதாயம் தெரியாது" என்றார்.

அப்போது சபாநாயகர் - "ஆளும்தரப்பின் கட்சிக் கொறடா சபைக்கு வந்து தனது உறுப்பினர்களைக் கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும்" - எனப் பகிரங்கமாகவே அழைப்பு விடுத்தார்.

தொடர்ந்து பேசிய அளுத்கமகே ஏதோ கூறினார். அதற்கு சபாநாயகர் "நீங்கள் சபையைப் பார்க்க வேண்டாம். என்னைப் பார்த்துப் பேசுங்கள்" என்றார். "ஐயா! நீங்கள் புத்தபகவான போல் இருக்கிறீர்கள், உங்கள் முகத்தைப் பார்த்து எப்படி இதை எல்லாம் கூறுவது?" என்றார்.

"புத்தபகவான் ஒருவர்தான் எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்பார். நீங்கள் தாராளமாகப் பேசலாம்" என்றார் சபாநாயகர்.

அதனால் சபையில் எல்லோருமே சிரித்துவிட்டனர். சூடாக ஆரம்பித்த இரண்டாவது நாள் விவாதம் சபாநாயகரின் நகைச்சுவையுடன் ஒத்தி வைக்கப்பட்டது.

(ஓ)

## ஜனாதிபதியின் 'திருமொழிகள்' நம்புவதற்கு நாம் தயாரில்லை; நம்பியவர்களுக்கு நடந்தது தெரியும்

### அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

'ஜனாதிபதியின் வாக்குறுதிகளையும் உறுதிமொழிகளையும் நாம் நம்பத் தயாராக இல்லை. ஜனாதிபதியின அதிகாரங்களைக் குறைக்கும் சட்டதிருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தே தீருவோம். அதில் வெற்றியும் பெறுவோம்' என்பது உறுதி - இவ்வாறு சமுர்த்தி, விவசாய, கால்நடைகள் அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அடித்துக் கூறினார்.

'ஜனாதிபதி முன்னாள் அமைச்சர்கள் சௌமிய மூர்த்தி தொண்டமான், அஷ்ரப், ஸ்ரீமணி அத்துலத்முதலி ஆகியோருக்குக் கொடுத்த உறுதி மொழிகளையும் ஒப்பந்தங்களையும் நாம் அறிவோம். அந்த ஒப்பந்தங்களுக்குக் கடைசியில் என்ன ஆனது என்பது எனக்குத் தெரியும்' என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

உள்துறை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை மீது பேசும்போதே அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இப்படிக் குறிப்பிட்டார்.

திஸாநாயக்க மேலும் கூறியதாவது:-

பொலீஸ் திணைக்களம் முன்பு பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தபோது முப்படைகளுடன் பொலீஸ் திணைக்களமும் ஒரு யுத்தப்பிரிவு என்ற நிலையில் இருந்தது.

ஆனால், இதனைத் தனிமைப்படுத்தி முற்றிலும் ஒரு சிவில் அமைப்பாக பொதுமக்களின் - பொலீஸாரை நலன் காப்பவர்களாகவும் மாற்றி - பொதுமக்கள் - பொலீஸ் நல்லுறவை ஏற்படுத்துவதே எமது நோக்கம். இதன் அடிப்படையிலேயே உள்துறை அமைச்சு அமைக்கப்பட்டுள்ளது.

இப்பொறுப்பை ஏற்ற அமைச்சர் தனது நிர்வாகத்திறமையால் குற்றச் செயல்களைப் பெருமளவு கட்டுப்படுத்தி பொதுமக்கள் - பொலீஸ் நல்லுறவை ஏற்படுத்தியுள்ளார்.

முன்னைய ஆட்சியின்போது உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் தமது பதவி உயர்வுகளுக்காக உயர்நீதிமன்றம் வரை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

பாதுகாப்பு அமைச்சரையோ அல்லது அமைச்சின் செயலாளரையோ ஏனைய அமைச்சர்கள் கூட சந்திக்க முடியாது. தொலைபேசி மூலம் கூட பேச முடியாது.

பொலீஸாரின் பதவி உயர்வுகளை சந்திரானந்த டி சில்வாவும், பத்தேகம சஞ்சீவவும்தான் தீர்மானித்தனர். பொலீஸ்மா அதிபர் ஒரு பொம்மையாகவே இருந்தார். அவரால் கூட அமைச்சரைப் பார்க்க முடியாது.

ஆனால், இன்றைய நிலைமையை அப்படி இல்லை. பொதுமக்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்சி பேதம் இன்றி அமைச்சரை எந்த நேரத்திலும் சந்திக்க முடிகின்றது.

முன்பு இந்தச் சபையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் அளிக்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், சபைக்கு வரமாட்டார். ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே போன்றவர்கள்தான் தூக்கிச் சுமந்தனர். இன்று நீங்கள் கேட்கும் எல்லா கேள்விகளுக்கும் அமைச்சர் நேரடியாகவே பதில் அளிக்கின்றார்.

முன்பு பல குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கும், முந்தானையின் பின் ஒளிந்து கொண்டவர்களுக்கும் அமைச்சரின் அதிரடி நடவடிக்கைகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன. இதனால்தான் நம்பிக்கை இல்லாப் பிரேரணையை முன்வைத்துள்ளனர் - என அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க குறிப்பிட்டார்.

(ஓ)

### பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர்

## அடிப்படை உரிமைகளுக்கு ஆப்பு வைத்தனர் அன்று; அமைதி நிலையைக் குழப்ப முயற்சிக்கின்றனர் இன்று!

### ரவிராஜ் எம்.பி. குற்றச்சாட்டு

பொ.ஐ.மு. அரசு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு ஆப்பு வைத்தது. அது இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் அமைதி நிலைமையையும் சமாதானப் பேச்சுக்களையும் குலைக்கும் வகையிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்துள்ளது. அர்த்தமற்ற இந்தப் பிரேரணையை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வன்மையாக எதிர்க்கின்றது - என யாழ்.மாவட்ட தமிழர் தேசிய கூட்டமைப்பின் என்.ரவிராஜ் எம்.பி. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

உள்துறை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை மீது பேசிய ரவிராஜ் எம்.பி. மேலும் கூறியதாவது:-

"இன்றைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் சமாதானத்திற்கான வழிகள் திறக்கப்பட்டுள்ளன. மக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். சோதனைச் சாவடிகள் இல்லை. வீதித் தடைகள் இல்லை. அனாவசியமான கைதுகள் இல்லை. இந்த நல்ல சூழ நிலைமை சிதைக்கவேண்டாம்.

முன்பு என்ன செய்தீர்கள்? உயிருக்குப் பயந்து லொட்ஜுகளில் தங்கி இருந்த இளம் பெண்களை இரவு ஆடைகளுடன் இழுத்துச் சென்று சிறையில் தள்ளியதோடு வீடியோப் படங்களும் எடுத்தீர்கள்.

செம்மணியில் 600க்கும் மேற்பட்டவர்களை உயிரோடு புதைத்தீர்கள். இந்தக் காரியத்தை செய்தவருக்கு 'வெளிநாட்டுத் தூதுவராகப்' பதவி உயர்வு கொடுத்தீர்கள்.

தேர்தல் காலங்களில் என்ன நடந்தது? தீவகப் பகுதிக்குத் தேர்தல் நடவடிக்கைகளுக்காகச் சென்ற எமது உறுப்பினர்கள் அப்போதைய அமைச்சரினாலும், அவரது குண்டர்களினாலும் தாக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர். இவர்களால் தாக்கப்பட்ட நண்பர் இன்றும் ஊன்றுகோலுடன் இந்தச் சபைக்கு வருகின்றார்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் இன்னும் சிறைகளில் வாடுகின்றனர். இப்படி பல்வேறு வழிகளிலும் தமிழர்களின் அடிப்படை உரிமைகளுக்கு ஆப்பு வைத்தவர்கள் இப்போது அமைச்சருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வந்துள்ளனர். இவர்களுக்கு அமைதி, சமாதானத்தின் மீது நம்பிக்கை இல்லை என்பதை இது உறுதிப்படுத்தியுள்ளது - என ரவிராஜ் எம்.பி. கூறினார்.

(ஓ)

### எதிர்கட்சிகள் கொண்டுவந்த

## இந்த அவநம்பிக்கை பிரேரணை அபத்தமானது; ஆதாரமற்றது!

### அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற விரும்பத்தகாத அசம்பாவிதங்கள் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவாமல் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொண்ட உள்துறை அமைச்சரின் சேவை பாராட்டப்பட வேண்டியது. அதற்கு மாறாக அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வருவது அபத்தமானது; ஆதாரமற்றது - இவ்வாறு துறைமுக, கப்பல்போக்குவரத்து, முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

உள்துறை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கைஇல்லாப் பிரேரணை மீது பேசிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் கூறியதாவது:-

"கிழக்கு மாகாணத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டபோது பல அச்சுறுத்தல்களுக்கும், ஆபத்துகளுக்கும் மத்தியில் அமைச்சர் எம்மோடு அங்கு நேரடியாக வந்தார். பொலீஸார், படையினர் என பலதரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசினார். அமைதி ஏற்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டார்.

"அன்று அவர் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளினால் கலவரங்களிலிருந்து கல்முனை பாதுகாக்கப்பட்டது. மூவின மக்களும் ஐக்கியமாக வாழவேண்டும் என்பதே எமது நோக்கம்.

"இப்பொழுது கொழும்பில் துப்பாக்கிக் கலாசாரம் தலைதூக்கி உள்ளது. வர்த்தகர்களும் பொதுமக்களும் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். எமது கட்சியைச் சேர்ந்த கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

"பாதாள உலக கோஷ்டியினர் பலர் பிணையில் விடுதலையாகி வெளியில் - சுதந்திரமாக - நடமாடுகின்றனர். இவ்விடயத்தை அமைச்சர் கவனிக்க வேண்டும்.

"இன்று போதைப் பொருள் கடத்தல்கள் பெருமளவில் முறியடிக்கப்பட்டுள்ளன. பல கிரிமினல்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றச் செயல்கள் பெருமளவில் குறைந்துள்ளன. இப்படியான நிலையில் எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அடிப்படையே இல்லை. எனவே இதனால் முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாக எதிர்க்கின்றது." - என அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

(ஓ)

முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY BIRTHDAY

22.08.2002



JASMIKAN

பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த

திரு.திருமதி யோசப் கொட்வின் ~துர்க்கா

தம்பதிகளின்

செல்வப்புதல்வன் யஸ்மிகன்

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று(22.08.2002) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமா, மாமி, பெரியம்மா, பெரியப்பா, அளவெட்டியைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, கொழும்பு மாமி குடும்பம், இந்தியா மாமி குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் யஸ்மிகன் குட்டியை யேசுவின் அருள்பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

"நான் உன்னோடு கூட இருப்பேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (நியா. 16.ஆதி 12.2)

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

தகவல்:
திரு.திருமதி கொட்வின் - துர்க்கா
(அப்பா, அம்மா).

(7324)



உ

நல்லூர் மகோற்சவ கால

தெய்வீகத் தொடர் இசைப்பேருரை

மகாபாரதம்

இடம்: நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்துவிநாயகர் மண்டபம்
நிகழ்த்துபவர்:- கான கதாவாரிதி
கொக்குவில் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா
தினமும் மாலை 6 மணிக்கு நடைபெறும்.

அணிசேர் கலைஞர்கள்

திரு.S.பிச்சையப்பா - முகவீணை
திரு.T. இராஜன் - மிருதங்கம்
பிரம்மஸ்ரீ .S. பாலச்சந்திரசர்மா - கெஞ்சரா.

- மேற்படி நல்லூர் சைவமகா சபை.

அன்பளிப்பு:- சஞ்சீவி - சங்குசக்கரம்
பெயின்ற் ஹவுஸ்
பரமேஸ்வரா சந்தி - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(7346)



மினிவான் பாடசாலை சேவை

மேற்குறிப்பிட்ட சேவை செய்யும் வான் சேவையாளர் அராலி மத்தி, வட்டுக்கோட்டையில் இருந்து ஒரு மாணவனை யாழ்ப்பாணம் பொஸ்கோ (Bosco) பள்ளிக்கூடத்திற்கு அழைத்துப்போய் திரும்பவும் கொண்டுவந்துவிட முடியுமானால் உடன் தொடர்புகொள்ளவும்.

விளம்பர இல. 1609,
C/o உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(7329)



யுறிபிடீஸின் கிரேக்க நாடகச் சிங்களத்தில்

— ட்ரோஜனத்துப் பெண்கள் —

| | | |
|---|---|---|
| நெறியாள்கை | : | தர்மசிறி பண்டாரநாயக்கா |
| திகதி | : | 23.08.2002 வெள்ளிக்கிழமை |
| நேரம் | : | பி.ப. 3.00 மணி |
| இடம் | : | யாழ்ப்பாணம் வேம்படி உயர்தர பாடசாலை |

திருமறைக்கலாமன்ற அலுவலகத்தில் இலவச அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(7151)


## சிறுவர் வதிவிடப் பாசறை

யாழ்ப்பாணம்,ஓக.22

யாழ்.திருமறைக் கலாமன்றம் நாளை வெள்ளிக்கிழமைமுதல் எதிர் வரும் 26ஆம் திகதி வரை சிறுவர் வதிவிடப் பாசறை ஒன்றை கொழும்பில் நடத்தவுள்ளது. நாளை மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும் இந் நிகழ்வில் இலங்கையின் பல பிரதேசங்களிலுமுள்ள திருமறைக் கலாமன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுவர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள். (ஓ)

## நூல் அறிமுக அரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.22

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் 'மணல்வெளி அரங்கு' என்னும் சிறுகதைத் தொகுதியின் அறிமுக அரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா தலைமைவகிப்பார்.

செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் தொடக்கவுரை, பதில் அரச அதிபர் து.வைத்திலிங்கத்தின் நூல் அறிமுகம், யாழ்பல்கலைக்கழக தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸின் அறிமுகவுரை மற்றும் மதிப்பீட்டுரை ஆகியன இடம்பெற இருக்கின்றன. (ஓ-3)

# கசிப்பு உற்பத்தி ஊரெழுவில் அதிகரிப்பு

ஊரெழு மேற்குப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஊரெழுப் பகுதியில் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த பல வீடுகள் பயன்படுத்தப் படாது கைவிடப்பட்டுள்ளன.

இதனைக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, இரவு நேரங்களில் அங்கு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு 7 மணிக்கு பின்னர் பகிரங்கமாகவே கசிப்பு காய்ச்சப் பயன்படும் உபகரணங்களுடன் பலர் அப்பகுதியில் நடமாடுவதைக் காணக்கூடியதாகவுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஓ-86)


50ஆம் ஆண்டு நிறைவு திருமண வாழ்த்துக்கள்

இன்று(22.08.2002) வியாழக்கிழமை தமது ஐம்பது வருட திருமண பந்தத்தை இனிதே பூர்த்திசெய்யும் கப்பூது, கரவெட்டியில் வசிக்கும் இளைப்பாறிய அதிபர்கள்

திரு. கதிர்காமு கந்தவனம்

திருமதி தங்கம்மா கந்தவனம்

தம்பதிகளை சகல வளங்களும் பெற்று எல்லாம் வல்ல கப்பூது பிள்ளையார் அருளால் நீடூழி வாழ்க என்று வாழ்த்துகின்றோம்.

132,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (7305)

பெறாமகன்:
திரு.திருமதி வீரகத்திப்பிள்ளை,
செல்வன் வீ.கௌதமன்.



உ
கணபதி துணை

FLYING PIGEON RIDER SHIMANO BIKE'S

வாங்கிவிட்டீர்களா? மலிவு...! மலிவு...!! மலிவு...!!!

யாழ். மக்களுக்காக மிகக் குறைந்த விலையில் யப்பானிய உதிரிப்பாகங்கள் கொண்ட மிகச்சிறந்த

துவிச்சக்கரவண்டிகள்

அத்துடன், இலவசமாகப் பல பொருள்கள்!
நான்கு வருடங்களுக்கு மேற்படாத உத்தரவாதம்.
* ஸ்ராண்ட் *கரியல் *கூடை *பூட்டு *பெல்
*டைனமோ, பெருட்........ இன்னும் பலப்பல

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு தவணை முறையிலும் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
பூங்காவனத்திருவிழா அன்று அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு ரூ.7500/= பெறுமதியான
6 கியர் ஆடம்பர சைக்கிள் ஒன்று பரிசாக வழங்கப்படும்.

டிக்கட் 20/=

(7349)

விவரங்களுக்கு: நல்லூரில் – சுபாஸ் கிறீம்ஹவுஸ் அருகில் யாழ்நகரில் – இல. 6. முனீஸ்வரன் வீதி.



உ
சிவமயம்

புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருஷம் ஆவணித் திங்கள் 7ஆம் நாள் 23.08.2002 வெள்ளிக்கிழமை பிரதமை திதியும் சதய நட்சத்திரமும் கூடிய காலை 7.10 மணிமுதல் 8.33 மணிவரை வரும் கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

பிருந்தாவனம்

எனும் புதுமனையில் பிரவேசஞ்செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அத்தருணம் சமுகமளித்து புதுமனையை ஆசீர்வதித்து விழாவிற் கலந்துசிறப்பித்து எம்மை மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

41, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திருமதி இ.அன்னலட்சுமி,
செல்வி இ.சுகந்தினி (நந்தி).

(7338)



சிவமயம்

மங்களகரமான

புதுக்கடை திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருஷம் ஆவணித் திங்கள் 7ஆம் நாள்
நாளை (23.08.2002) வெள்ளிக்கிழமை
நண்பகல் 12.09 மணிமுதல் 1.49 மணிவரையுள்ள
சுபமுகூர்த்த நல்வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

நியூ நவீனா நகையகம்

எனும் [illegible] அன்பர்கள், நண்பர்கள், [illegible] அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

189, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/23246)

தற்போதைய நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்.

உதயன்

# ஜனாதிபதியின் உறுதியுரையையே அரசமைப்புத் திருத்தமாக்குக!

நாட்டில் இப்போது முக்கிய அரசியல் சர்ச்சைக்குரிய விடயமாக மாறியிருப்பது நாடாளுமன்றக் கலைப்பு விவகாரம்.

பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு ஓராண்டு முடிவுற்ற நிலையில் நாடாளுமன்றத்தைத் தற்றுணிவுப்படி கலைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குக் கிடைக்கின்றது.

அத்தகைய அரசமைப்பு அதிகாரத்தின்படி, தற்போதைய நாடாளுமன்றின் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் 5 ஆம் திகதி ஓராண்டைப் பூர்த்தி செய்ததும், அதனை எப்போதும் ஜனாதிபதி கலைக்கக்கூடும் என்றும் ஆளும் தரப்பு கருதுகின்றது.

எனவே, நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்ட வேண்டும் என்கின்றது ஆளும் கட்சி. அதற்கான முஸ்தீபுகளிலும் மும்முரமாக இறங்கியுள்ளது அத்தரப்பு.

ஆனால், ஜனாதிபதியோ நாடாளுமன்றத்தை நான் கலைக்கமாட்டேன்; கலைக்க மாட்டேன் என்று திருப்பித் திருப்பிக் கூறுகின்றார். எழுத்துமூலம் நாடாளுமன்றத்துக்கு உறுதியும் வழங்குகின்றார்.

இப்படி ஆளும் கட்சியும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும் ஒரே விடயத்துக்காக சிண்டு பிடித்துக்கொண்டு மோதத் தயாராகி வருகின்றார்கள். இந்த ஒரே விடயத்துக்கு இரு தரப்பினரும் தங்களுக்கு சார்பாக கூறும் காரணமும் ஒன்றாக இருப்பதுதான் விநோதம்.

நாட்டை சீரழித்து வரும் யுத்தத்திலிருந்து நாட்டையும், பொதுமக்களையும் விடுவிப்பதற்காகவும் நிலைத்து, நீடித்து நிற்கும் சமாதானத்தீர்வை எட்டுவதற்காகவும் அமைதி முயற்சிகள் முனைப்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தால் அமைதி முயற்சிகள் அடிபட்டுப் போய்விடும். நாடு மீளமுடியாத ஆபத்துக்குள் சிக்கிவிடும். எனவே, நாடாளுமன்றத்தைத் திடீரென - தன் விருப்பப்படி - கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்ட வேண்டும் என்கிறது ஆளும் தரப்பு.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் தேசிய முக்கியத்துவம்வாய்ந்த ஒரு விடயத்தில் நாடு மும்முரமாக இருக்கும் இந்தச் சமயத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்தால் எதிர்பார்க்கமுடியாத - எதிர்வு கூறமுடியாத - பாதக விளைவு ஏற்படும். ஆகவே, நாடாளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன் என்று ஜனாதிபதி உறுதி கூறுகின்றார்.

ஆக -

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பாக ஜனாதிபதியின் அதிகாரத்தை ஏன் வெட்ட வேண்டும் என்று ஆளும் தரப்புக் கூறுகின்றதோ அதே காரணத்துக்காக நாடாளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் என்கிறார் ஜனாதிபதி.

"தற்போதைய அரசுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதாகக் கருதுகின்றேன். அந்தப் பெரும்பான்மையை அரசு கொண்டிருக்கும் வரை நாடாளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன்" - என்றும் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு எழுத்து மூலம் உறுதிகூறுகின்றார்.

ஜனாதிபதியின் இந்த உறுதியுரையை அறிந்த பின்னர் இது விடயத்தில் ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் ஏன் சண்டை புரிய வேண்டும் - இழுபறிப்பட வேண்டும் - என்ற சந்தேகம் மக்களுக்கு எழுந்துள்ளது.

தற்போதைய நாடாளுமன்றத்துக்குப் பெரும்பான்மை இருக்கும்வரை அதைக் கலைக்கமாட்டேன் என்று ஜனாதிபதி கூறுவதை நம்பமுடியாது. அவர் தனது உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிட்டுவிடுவார் - என்று அரசுத்தரப்புக் கருதுமானால், ஜனாதிபதி இப்போது வழங்கியுள்ள உறுதிமொழியில் கூறப்பட்டுள்ள அம்சத்தையே அப்படியே அரசமைப்புத் திருத்தமாக்கி, ஜனாதிபதியின் உறுதிமொழிக்கு சட்ட அந்தஸ்து வழங்கி அதை நிலைநிறுத்தி விடலாமே?

அதாவது -

ஆட்சியில் இருக்கும் அரசு நாடாளுமன்றப் பெரும்பான்மையை இழந்துவிட்டது என்பதை சட்ட ரீதியாக உறுதிப்படுத்தும் நிலைமை ஏற்பட்டாலேயொழிய - பெரும்பான்மை கொண்டுள்ள அரசு தானாக விரும்பிக் கேட்காதவரை - ஒரு நாடாளுமன்றத்தை அதன் பதவிக்காலம் முடியும் முன்னர் ஜனாதிபதி கலைக்கமுடியாது என்ற வகையில் உத்தேச அரசமைப்புத் திருத்தத்தை மாற்றியமைக்கலாமே!

அப்படி ஜனாதிபதியின் பிந்திய உறுதியுரையையே உத்தேச அரசமைப்புத் திருத்தமாக மாற்றி அமைத்தால் அரசுத் தரப்பின் எதிர்பார்ப்பும் நிறைவேறும்; ஜனாதிபதியும் அவர் சார்ந்த எதிர்க்கட்சிகளும் அத்திருத்தத்தை எதிர்க்க முடியாமல் போகும்.

சம்பந்தப்பட்டோர் இந்த யோசனையைப் பரிசீலிப்பார்களா?

---

## திருடர்கள் பின்பற்றும் புதிய யுக்தி

# முகவரி கேட்பதுபோல் நெருங்கி பெண்ணின் தாலிக்கொடி அபகரிப்பு!

வலி.வடக்கு,ஓக.22

பெண்களிடம் முகவரி விசாரிப்பவர்போன்று நடித்து நெருங்கிச் சென்று அவர்களின் நகைகளை திருடர்கள் அபகரித்துச் செல்லும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துவருகின்றன.

இத்தகைய சம்பவங்களில் சமீபத்திய சம்பவம் திருநெல்வேலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் நல்லூர் ஆலயத்திற்குச் சென்றுவிட்டு இரவு நேரம் திரும்பியவரின் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி இரு இளைஞர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் திருநெல்வேலி மாரியம்மன் ஆலயத்திற்குப் பின்புறம் உள்ள வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த அந்தப் பெண்மணியிடம் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் 'குணம் வீடு எங்கே?' எனக் கேட்டதாகவும் -

அந்தச் சமயம் பெண்மணியின் முகத்தில் அந்த இளைஞர்களில் ஒருவர் கையால் அடித்து விட்டு தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கூக்குரல்கேட்டு வந்த அயலவர்கள் தாலிக்கொடியின் ஒரு பகுதியை மட்டும் அவ்விடத்தில் இருந்து கண்டெடுத்துள்ளனர்.

நபர் ஒருவரின் முகவரியை விசாரிப்பதுபோன்று நடித்து, சமயம் பார்த்து தாக்கிவிட்டு நகைகளை அபகரிக்கும் சம்பவங்கள் சமீபகாலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-86)

---

## பொலிகண்டி கிழக்குப் பகுதியில்

# வீடுகளுக்கு அருகில் அமைக்கப்பட்ட சோதனைச் சாவடிகளை அகற்றுக!

## கடற்றொழிலாளர் சங்கம் வேண்டுகோள்

கரவெட்டி,ஓக.22

பொலிகண்டியில் கடற்றொழிலாளர்களது குடியிருப்புப் பகுதிகளில் அதிலும் குறிப்பாக வீடுகளை ஒட்டி படையினர் சோதனைச்சாவடிகளை அமைத்துவருவதால் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதாகப் பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் எமது பகுதியில் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் அதிர்ச்சி அளிப்பனவாக உள்ளன. இப்பகுதியில் வீடுகளை அண்டிப் படையினர் சோதனைச் சாவடிகளை அமைத்துள்ளனர். பொலிகண்டி கிழக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்குட்பட்ட பகுதி அரை மைலுக்குட்பட்டது. இந்தக் குறுகிய தூரத்துக்குள் 7 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை வீடுகளை அண்டி அமைக்கப்பட்டிருப்பதால் வீடுகளில் உள்ள பெண்கள் அச்சமடைகின்றனர். பெரும்பாலான ஆண்கள் இரவுவேளையில் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்று விடுகின்றனர். இதனால் பெண்கள் வீடுகளில் தனித்திருக்கும் சூழ்நிலை உள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வீடுகளையொட்டி சோதனைச்சாவடிகளை அமைக்கவேண்டாம் என்று பல தடவைகள் முறையிட்டபோதும், உரியநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால் நாம் கரையோரப் பிரதேசத்தில் குடியிருக்காது வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை.

- இவ்வாறு மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது. (ஓ-70)

---

# தேர்தல் கடமையில் ஈடுபடும் அலுவலர் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.22

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலின்போது கடமையில் ஈடுபடவுள்ள அலுவலர்கள் தொடர்பான விவரங்கள் யாழ்.மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

இதுதொடர்பான கடிதங்கள் சகல பிரதேச செயலகங்களுக்கும், கல்வி வலயங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராசா அறிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்கள் அவரவர்க்குரிய கல்வி வலயங்களிலும், ஏனைய அலுவலகங்களின் தலைமை அதிகாரிகள் தமது பகுதிப் பிரதேச செயலகங்களிலும் உரியபடிவங்களைப் பெற்றுக்கொள்ளும்படியும் - ஊழியர்கள் அவற்றைப் பூர்த்திசெய்த பின்னர் படிவங்களை எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு யாழ்மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறும் -

உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தற்போது பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளதால், ஆசிரியர்கள் இதுதொடர்பாக தத்தமது பாடசாலை அதிபர்களுடன் தொடர்புகொண்டு, படிவத்தைப் பூர்த்திசெய்ய ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஓ-10)

---

## தொழிலாளர் பிரச்சினை குறித்து

# யாழ்.அலுவலகத்திலேயே முறைப்பாடு செய்யலாம்

## பிரதி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக 22

குடாநாட்டில் பல்வேறு நிறுவனங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக தொழில் திணைக்கள யாழ்.அலுவலகத்தில் முறையிடலாம் என்று வடமாகாண தொழில்துறைத் திணைக்கள பிரதி ஆணையாளர் அர்.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் உள்ள தொழிலாளர்கள் பலர் பணி சம்பந்தமான தமது முறைப்பாடுகளைச் செய்வதற்கும், தமக்கு வேண்டிய பதில்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கொழும்பிலுள்ள தொழில் திணைக்கள தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்கின்றனர்.

ஆனால், அது பயனற்றது. அவர்கள் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இயங்கி வருகின்ற தொழிற்துறைத் திணைக்கள யாழ்.அலுவலகத்துடனேயே தொடர்புகொள்ளவேண்டும்.

கொழும்பு அலுவலகத்துடன் தொடர்புகொள்பவர்களுக்கு அங்கிருந்து சிங்கள மொழியில் எழுதப்பட்ட கடிதம் ஒன்று அனுப்பப்படுகின்றது. அதனை வாசிக்கமுடியாது அவர்கள் சிரமப்படுகின்றனர்.

"தொழில் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள்" என்பதே அதன் தமிழ் வடிவமாகும்.

எனவே தொழிலாளர்கள் வீண் சிரமங்களை எதிர்நோக்காமல் தமது பிரச்சினைகள், தேவைகள் தொடர்பாக தொழில் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்துடன் தொடர்புகொண்டு உரிய பரிகாரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் - என்று தெரிவித்தார். (ஓ-4)

---

# இந்திய விஞ்ஞானிகள் இலங்கைக்கு விஜயம்

கொழும்பு,ஓக.22

இந்தியாவைச் சேர்ந்த விவசாய விஞ்ஞானிகள் இருவர் இலங்கை வந்துள்ளார்கள்.

புதியரக மரக்கறி வகைகளை உருவாக்குவது குறித்து ஆய்வு செய்த டாக்டர் இகலு மற்றும் டீசல் பெற்றோல் முதலானவற்றிக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய எரிபொருள் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளும் டாக்டர் மகேஸ்வரி ஆகியோரே, இங்கு வருகை தந்துள்ளவர்களாவர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவை அவரது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்தனர்.

புதியரக காய்கறிகளை உற்பத்தி செய்வது, அவற்றின் தரம் ஆகியவை பற்றி இந்தச் சந்திப்பில் உரையாடப்பட்டது.

விரைவில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே விவசாய ஆராய்ச்சி சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-12)

### நாளை

ஆவணி 07
வெள்ளிக்கிழமை
(23.08.2002)
திதி : பிரதமை
வைகறை 5.37வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
காலை 6.43 வரை
சுபநேரம் : 6.05 - 7.35
ராகுகாலம் : 10.35 - 12.05
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

நன்மை செய்யுங்கள். யாருக்கு என்று கவலைப் படாதீர்கள்.

---

# மாதகல் கடற்பகுதியிலும் தமிழக மீனவர் ஆதிக்கம்

யாழ்ப்பாணம்,ஓக 22

மாதகல், பண்டத்தரிப்பு கடற்பகுதிகளில் இந்திய மீனவர்களின் ஆதிக்கம் தொடர்ந்தும் மேலோங்கி வருவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களின் பாரிய வள்ளங்கள் மற்றும் ரோலர்கள் குடாநாட்டு மீனவர்கள் விரித்த வலைகளை அறுத்து சேதப்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது.

இராமேஸ்வரம், தனுஷ்கோடி ஆகிய இடங்களில் இருந்து வரும் தமிழக மீனவர்கள் காங்கேசன்துறைக் கடற்பரப்பு ஊடாக, மாதகல், பண்டத்தரிப்பு கடற்பகுதிக்குள் பிரவேசித்து தொழில் புரிவதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு அத்துமீறி நுழைகின்ற மீனவர்களை இலங்கை கடற்படையினர் அவ்வப்போது கைதுசெய்து வருகின்றபோதிலும் அவர்கள் எந்தவித அச்சமும் இன்றி கரைகளிலிருந்து கண்ணுக்கு எட்டும் தூரம் வரையில் வருகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கடந்த 19ஆம் திகதி இப்பகுதிக் கடற்பரப்பில் ஐந்து வள்ளங்களில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களைக் கடற்படையினர் துரத்திச் சென்றதாகவும் - அப்போது அவற்றில் இரண்டு வள்ளங்கள் தப்பித்துவிட ஏனைய மூன்று வள்ளங்களும் கடற்படையினரிடம் சிக்கிக்கொண்டதாகவும் -

அந்த வள்ளங்களை கடலில் நங்கூரமிட்டு நிறுத்திவிட்டு அவற்றிலிருந்த மீனவர்களை கடற்படையினர் தமது படகுகளில் ஏற்றி காங்கேசன்துறை நோக்கிக் கொண்டுசென்றதாகவும் -

மாதகல் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (ஓ-4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1941 - 12 - 27



உதிர்வு 2001 - 09 - 03

அமரர்

### பொன்னையா வேலாயுதப்பிள்ளை

*(ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை வங்கி)*

திதி: 22.08.2002

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
அமைந்த எங்கள் குடும்பத் தலைவரே!
உப்புக்குளம் சந்திரசேகரர் திருவடியில் கலந்து
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*டச்சு வீதி, தொல்புரம்.* (7309) உங்கள் பிரிவால் வாடும்: குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 - 02 - 1934



மறைவு 22 - 08 - 2000

### அமரர் கா.மாணிக்கவாசகர்

*(முன்னாள் அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்)*

எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, இன்று ஆதிபராசக்தியுடன் சங்கமித்து ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்துவிட்டன என்பதை எம்மால் உணரமுடியவில்லை. இன்றும் எம்முடனேயே வாழ்ந்து, எம்மை வழிநடத்திச் செல்வதாகவே நாம் உணர்கின்றோம். என்றும் எங்கள் மனங்களிலும், ஈழத்து மக்கள் மனங்களிலும் வாழும் உங்களை எமது குடும்பத் தலைவராகப் பெற்று வாழ்ந்ததைப் பெரும் பாக்கியமாகவே கருதிப் போற்றுகின்றோம். என்றும் உங்கள் இனிய நினைவுகளுடன் வாழும் குடும்பத்தினர்.

தகவல்:
மனைவி, மக்கள்
ஆஸ்திரேலியா.
(7316)

பாசமுடன் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சிறியதாயார், சகோதரிகள், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், பெறாமக்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தாய் மடியில் 02 - 10 - 1916



பிரானடியில் 23 - 07 - 2002

### அமரர் முருகேசு இராசையா

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த
உங்களை மறக்கவே முடியாது!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சைவிட்டு அகலவே அகலாது!
*ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது குடும்பத் தலைவர் நினைவாக எமது இல்லத்தில் இன்று (22.08.2002) வியாழக்கிழமை நடைபெறுகின்ற சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- இ.பாலசிங்கம்
(மகன்-தாதிய உத்தியோகத்தர்)
- குடும்பத்தினர்.

*நீர்வேலி தெற்கு, நீர்வேலி.* (7294)

## முழுநிலா கலை விழா

வலி.கிழக்கு, ஓக.22

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் முழுநிலா நாள் கலைவிழா இன்று பிற்பகல் 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலகப் பிரதம எழுதுவினைஞர் எஸ்.நடராசாவும், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் தெற்கு கிராம அலுவலர் மா.கருணாநாதன், கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர் சு.மகேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

இந்த நிகழ்வில் எழுத்தாளர் ப.சிவானந்தசர்மா (கோப்பாய்சிவம்) கௌரவிக்கப்படவுள்ளார். கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ஒ-180)

## கையெழுத்து சஞ்சிகைகள் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.22

ஆசிரியப் பயிலுநர்களது ஆக்கத திறனை ஊக்குவிக்கும் முகமாக, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் கடந்த 16ஆம திகதி ஐந்து கையெடுத்துப் பிரதிகள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

ஆரம்பக்கல்வி மன்றத்தின் 'ஆரம்ப அருவி' தமிழ் மன்றத்தின் 'புலர்வு', அழகியல் மன்றத்தின் 'அழகு', விஞ்ஞான, கணித மன்றத்தின் 'குளியம்', ஆங்கில மன்றத்தின் 'ஜாசெல்ட் ஸ்பிரிங்' ஆகிய சஞ்சிகைகளே வெளியிடப்பட்டுள்ளன.

(ஒ-180)

## திருமண வாழ்வில் பொன்விழா

### கொண்டாடும் தம்பதிகள்

*(22.08.1952 - 22.08.2002)*



### திரு.கதிர்காமு கந்தவனம்

(இளைப்பாறிய அதிபர்)

### திருமதி தங்கம்மா கந்தவனம்

(இளைப்பாறிய அதிபர்)

**இவர்கள் மேலும் பல்லாண்டு சுகமே வாழ வாழ்த்துவோர்:**

மகன்: க.தவராசா *(இத்தாலி)*
மகள்: ஜெ.தவமலர் *(அதிபர், கப்பூது ஏகாம்பர வித்தியாலயம்)*
மருமகன்: ஆ.ஜெயக்குமார் *(வீதி அபிவிருத்தித்திணைக்களம்)*
மருமகள்: த.புஸ்ப்பலீலா *(இத்தாலி)*
பேரப்பிள்ளைகள்: நிலுஜா, றெசாந்தன், நிரோஜன்

சகோதரர்கள், மைத்துனர், மைத்துனிமார்கள், பெறாமக்கள், மருமக்கள், ஏனைய பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

'ஜெயமலரகம்'.
கப்பூது, கரவெட்டி.

தகவல்:
ஆ.ஜெயக்குமார்

(7250)

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 6ஆம் நாள் இன்று (22.08.2002) வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.20 மணிவரையுள்ள அவிட்ட நட்சத்திரமும் சோபனயோகமும் கூடிய விட்டிகரண துலாலக்கினத்தில் வரும் சுபமுகூர்த்த வேளையில்,

திரு.திருமதி முத்துக்குமாரு தம்பதிகளின் புத்திரன்
திருநிறை செல்வன்
**கண்ணகுமார்** (B.Com.)
அவர்களுக்கும்



திரு.திருமதி சங்கரப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரி
திருநிறை செல்வி
**புஷ்பமாலா**
அவர்களுக்கும்

இறைவன் துணையுடன் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பசமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி சி. முத்துக்குமாரு
கற்கோவளம், பருத்தித்துறை.

திருமதி பு.சங்கரப்பிள்ளை
*உடுத்துறை தெற்கு, தாளையடி.*
தற்காலிகமுகவரி:
*வெல்லம்பிட்டி, புலோலி தெற்கு, பருத்தித்துறை.*

(இரு வீட்டார் அழைப்பு)

(7274)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஆவணி 6ஆம் நாள் இன்று(22.08.2002) வியாழக்கிழமை முற்பகல் 8.58 மணிதொடக்கம் 10.10 மணி (புதியநேரம்) கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**முகுந்தன்**
B.Sc.(Hons)M.Sc.Malaysia
(உதவி செயற்றிட்ட அதிகாரி
தேசிய கல்வி நிறுவகம், மகரகம)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சோபனா**
(மக்கள் வங்கி,
கன்னாதிட்டி கிளை)
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் இல.8, லொறின்ஸ் வீதி, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள A.V.S. மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.திருமதி தேவராசா**
சிறிசுமணராம வீதி முடிவு,
4/3, சீவிலி றோட்,
கல்கிசை.

**திரு.திருமதி ஜெயம்**
*(இலங்கை வங்கி, யாழ்.கிளை)*
118, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(7087)

# பேச்சுமூலம் சமாதானத்தில் வடபகுதி மக்கள் நம்பிக்கை

## சமீபத்தில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு தரும் தகவல்

இரு தசாப்தகால யுத்தத்தின் பின்னர் இலங்கை அரசுக்கும், எல்ரிரிஈக்கும் இடையிலான நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்தம் காரணமாக, முன்னர் எப்போதுமில்லாதவாறு, யாழ்ப்பாண மக்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கவனத்தைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தை மீளக்கட்டியெழுப்பமுயுலும் இத்தருணத்தில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சபையின்கீழ் தொழிற்படும் சுயேச்சையான கருத்தறியும் ஆராய்ச்சி நிறுவனமான சோஷல் இண்டிகேட்டர் யாழ்ப்பாண மக்களின் கருத்தினை வெளிப்படுத்துமுகமாக ஆய்வு ஒன்றை ஆரம்பித்தது.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மற்றும் வலிகாமம் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 2002 ஜுலை 22இலிருந்து ஜுலை 25 வரை இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், 300 பதிலிறுப்பாளர்களைக் கொண்ட மாதிரி ஒன்றின் மத்தியில், கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தொன்று பயன்படுத்தப்பட்டு, நேர்முகம் காணல் ஊடாக ஆய்வு இடம்பெற்றது. ஒட்டாவா பல்கலைக்கழகத்தின் ஆட்சி, நிறுவன ரீதியான பலப்படுத்தல் கருத்திட்டத்தின் ஊடாக கனடிய சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையினால் அளவீட்டுக்கான நிதி உதவி வழங்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் யாழ்ப்பாண மக்களில் பெரும்பான்மையோர் (33.8%) உச்சமான முன்னுணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். இதை அடுத்து முறையே வாழ்க்கைச் செலவும் (18.4%), தொழில்வாய்ப்பின்மையும் (15.4%) பின் தொடர்கின்றன என்றும் ஆய்வு காட்டுகின்றது.

தமக்கு மிகவும் முக்கிய பிரச்சினைகளாக மீள்குடியேற்றத்தை 7 வீதத்தினரும், சுதந்திரமான நடமாட்டத்தை 6 வீதத்தினரும் குறிப்பிடுவதைக் கவனத்திற்கு எடுப்பது ஆர்வத்துக்குரியதாகும். கிடைக்கும் சில வசதிகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றையிட்டு அவர்களது திருப்தியின மட்டம் பற்றிக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டபோது, உணவு கிடைக்கும் தன்மை பற்றி யாழ்ப்பாண மக்கள் திருப்தியடைந்தனர். ஆனால், அரசின் கடன் திட்டவசதிகள், மனிதாபிமான உதவி, தொழில் வாய்ப்புக்களின் கிடைக்கும் தன்மை ஆகியவற்றில் அதிருப்தி அடைந்திருந்தனர்.

### சமாதானம்

அவர்களிடம் சமாதானத்தின் கருத்துப் பற்றி கேட்டபோது, 48.8% மக்கள் இன ஒற்றுமையே சமாதானம் என்ற அதேவேளை, 29.8 வீதத்தினர் யுத்தத்தின் முடிவு என்றனர். அதேவேளை, சமாதானத்தை சுதந்திரம் எனவும், பாதுகாப்பு உணர்வு எனவும் முறையே 23.4 வீதத்தினரும் 18.7 வீதத்தினரும் முன்னுணர்வைக் கொண்டிருக்கின்றார்கள்.

மறுபுறத்தில் குடாநாட்டில் அரைவாசி மக்கள் (50.7%) யுத்தம் என்றால் மரணமும், அழிவும் என்றே கருதுகின்றனர். மூன்றில் ஒரு பகுதி மக்கள் (34.2%) உரிமைகளுக்கான சண்டையிடுதலே யுத்தம் என்ற கருத்தினைக் கொண்டிருப்பதைக் கவனத்திற்கெடுப்பது ஆர்வத்துக்குரியதாகும். பொருளாதார வளர்ச்சிக்கு யுத்தம் குறுக்கீடாக விளங்குவதாக 16.4% மக்கள் எண்ணும் அதேவேளை, யுத்தம் ஒற்றுமையைக் குலைக்கிறது என்றும், சமாதானத்தைச் சாதிப்பதற்கான வழிவகைகள் என்றும், முறையே 7.4 வீதத்தினரும் 6 வீதத்தினரும் உணர்கின்றனர்.

இலங்கையில் எப்பொழுது சமாதானம் நிலைநாட்டப்படும் என்பதற்கான காலக்கெடுவை வழங்குவதற்கு 52.2% மக்களுக்கு இயலாதபோதும் 31.4 வீதத்தினர் அது விரைவில் நிலைநாட்டப்படும் என நம்புகின்றனர். அடுத்து ஐந்து வருடங்களினுள் இலங்கையில் சமாதானம் நிலவும் என 5.4 வீதத்தினர் நம்புகின்றனர்.

சமாதானப் பேச்சுக்களின் ஊடாக இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, சமாதானத்தை ஏற்படுத்தலாம் எனப் பெரும்பான்மையான மக்கள் (89.3%) எண்ணுகின்றனர்.

### தீர்வு இல்லை

நேர்மையற்ற இராணுவ, அரசியல் தலைமைத்துவத்தின் விளைவாகவே கடந்த 15 ஆண்டுகளாக யுத்தத்திற்குத் தீர்வு கிட்டவில்லை என யாழ்ப்பாணத்தில் உள்ள மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்ட மக்கள் (31.5%) நம்புகின்றனர். அரசியல் மனவுறுதியின்மை மற்றும் அதிகாரத்தில் உள்ள மக்களுக்கு யுத்தம் அவசியம் ஆகியவையே காரணம் என ஏனையோர் (22.8%) நம்புகின்றனர். இன ஒற்றுமையின்மையும், எந்தவொருதரப்பாரும் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு விருமபமின்மையும் காரணங்களாக நோக்கப்படும் அதேவேளை, யுத்தத்திற்கான தீர்வின்மைக்கு 9.7 வீதத்தினரால் காரணங்களை வழங்கமுடியவில்லை.

### புலித்தடை நீக்கம்

இந்த யுத்தத்தில் முழுமையான வெற்றியை எந்தவொரு தரப்பினருமே சாதிக்கமுடியாது என 48.8% மக்கள் உணரும் அதேவேளை, இதையிட்டு 27.8 வீதத்தினர் உறுதியற்ற நிலையில் விளங்குவது ஆர்வத்துக்குரியதாகும்.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு எல்ரிரிஈ. மீதான தடையை நீக்குதல பற்றி அண்மைக் காலங்களில் மிகக் கடுமையாக வாதாடப்பட்டதுடன், இது சமாதான நடைமுறையின் முக்கியமான அம்சமாகவும் விளங்குகின்றது. இத்தடைநீக்கத்தை யாழ்ப்பாண மக்களில் 83.3 வீதத்தினர் அங்கீகரித்துள்ளனர்.

வன்னிக்கு உணவு மற்றும் மருந்து வகைகள் உட்பட சில அத்தியாவசிய பொருள்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான அரசின் தீர்மானத்திற்கு மக்களின் (87.6%) பெரும் பாராட்டு கிட்டியுள்ளது.

ஏனைய இனச் சமுதாயங்களில் இருந்து பெரிதும் தனிமைப்படுத்தப்பட்டு, யுத்தத்தின் மத்தியில் வாழ்க்கைக்கு முகங்கொடுத்தபோதிலும், பெருமளவு மக்கள் (71.2%) சகல சமூகங்களும் ஒன்றாக வாழ்வது சாத்தியம் என்று நம்புகின்றனர்.

இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தத்தைத் தீர்ப்பதற்கு சர்வதேச மூன்றாந்தரப்பின் சம்பந்தம் அவசியமானது என 69.6% மக்கள் கருத்தினைக் கொண்டுள்ளதுடன், இது உறுதியான தாக்கத்தைக் கொண்டிருக்கும் என 7 வீதத்தினர் கூறுகினறனர். சர்வதேச மூன்றாந்தரப்பின் சம்பந்தம் அவசியமில்லை என 12.7 வீதத்தினர் கருத்தினைக் கொண்டுள்ள அதேவேளை, 6.4 வீதத்தினர் நிச்சயமில்லை எனக்கூறுகின்றனர்.

இலங்கையின் சமாதான நடைமுறையில் நோர்வே உதவி அளிப்பதை யாழ்ப்பாண மக்களின் மத்தியில் முழுமையான அங்கீகாரமுள்ளதாக (81.9%) ஆய்வு காட்டுகின்றது.

இலங்கையின் சமாதான நடைமுறையில் இந்தியாவின் சம்பந்தம் அவசியமானது என பெருமளவு மக்கள் (36.8%) நம்புகின்றபோதிலும், இதற்கு மாறாக நம்புகின்றவர்களை (23.1%) உதாசீனம் செய்யமுடியாது. அதேவேளை, இந்தியாவின் சம்பந்தம் உறுதியான தாக்கத்தை சேர்க்கும் என்ற நம்பிக்கை யாழ்ப்பாணத்தில் உள்ள சிலர் (12%) மத்தியில் நிலவுகின்றது. இதற்கு மாறாக சமாதான நடைமுறைக்கு இந்தியாவின் சம்பந்தம் பாதகமான தாக்கத்தைச் சேர்க்கும் என 9 வீதத்தினர் உணர்கின்றனர்.

இலங்கை அரசும், எல்.ரி.ரி.ஈயும் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைசசாத்திட்டுள்ளன என குடாநாட்டில் உயர்ந்த மட்டத்திலான விழிப்புணர்வு (91%) உள்ள அதேவேளை, இவர்கள் மத்தியில் இவ்வுடன்படிக்கையின் உளளடக்கங்கள் பற்றி ஓரளவுக்கு அறிந்துள்ளதாகக் குறிப்பிடத்தக்க பெரும்பான்மையோர் (71.3%) குறிப்பிடுகின்றனர். எனினும் கணிசமானளவு வீதத்தினர் (26.5%) யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உள்ளடக்கங்களையிட்டு முழுமையாக அறிந்து வைத்திருக்கவில்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டமை பற்றி அறிந்து வைத்துள்ள பொதுமக்களின் குறிப்பிடத்தக்க வீதத்தினர் (65.1%) அதை முழுமையாக அங்கீகரிக்கும் அதேவேளை, அதை 23.8 வீதத்தினர் ஓரளவு அங்கீகரிக்கின்றனர். எனினும், உடன்படிக்கையின் நீண்ட ஆயுளை 25.1 வீதத்தினர் மட்டுமே நம்புகின்ற அதேவேளை, பெரும்பான்மையோர் (59.2%) உறுதியற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றனர்.

### நோர்வேயின் பங்கு

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் நோர்வேயின் பங்கு குறித்து அவர்களது திருப்தியின் மட்டம்பற்றி குறிப்பிடுமாறு கேட்டபோது, தாம் மிகவும் திருப்தியடைந்துள்ளதாக 47.8 வீதத்தினர் கூறுகின்ற அதேவேளை, 35.1 வீதத்தினர் ஓரளவு திருப்தியடைந்திருந்தனர்.

இதேபோல, யாழ்ப்பாணம் மக்கள் மத்தியில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கத்தில் முழுமையான திருப்தியுள்ளது (39.1 வீதத்தினர் பெரிதும் திருப்தியடைந்துள்ளதுடன், 42.5 வீதத்தினர் ஓரளவு திருப்தியடைந்துள்ளனர்.)

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் கீழ் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பாடசாலைக் கட்டடங்கள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றில் இருந்து இருதரப்பினரும் வெளியேறவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளமை பற்றி மக்கள் மத்தியில் மிகவும் உயர்ந்த மட்டத்திலான விழிப்புணர்வு (94.6%) உள்ளது. இவ்வாசகம் பற்றித் தெரிந்துவைத்துள்ளவர்கள் மத்தியில், 97.5 வீதத்தினர் இதை அங்கீகரிக்கின்றனர்.

யுத்தநிறுததத்தைக் கண்காணிப்பதில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் சம்பந்தம் பற்றி யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வொன்றை (90.3%) அவதானிக்க முடிகின்றது. வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் சம்பந்தம் பற்றி தெரிந்து வைத்துள்ளவர்கள் மத்தியில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு இத்தகைய கண்காணித்தல் தூதுக்குழு அவசியம் என பெரும்பாலானோர் (87%) நம்புகின்ற அதேவேளை, இது ஓரளவே உறுதியான தாக்கத்தைக் கொண்டிருக்கும் என 5.9 வீதத்தினர் நம்புகின்றனர்.

இலங்கைக் கண்காணிப்பு தூதுககுழு பற்றி அறிந்துவைத்துள்ளவர்கள் மத்தியில் பெரும்பான்மையோர் (57.2%) யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிப்பதில் அதில் பாரபட்சம் இன்றி நடப்பதாக நம்புகின்றனர். 8 வீதத்தினர் வேறுவகையில் உணர்கின்றனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையினைக் கண்காணிப்பதில் கண்காணிப்புத்தூதுக்குழு செயற்றிறனானது என 46.5 வீதத்தினர் உடன்படுகின்ற அதேவேளை, 13.4 வீதத்தினா இதற்கு மாறாக நம்புகின்றனர்.

*(நன்றி:சுடர்ஒளி)*

**நிறைவேற்று சாராம்சம்**

- பேச்சுகள் மூலம் சமாதானத்தை அடையமுடியும் என அதிகப்படியான பெரும்பான்மையோர் நம்புகின்றனர்.
- சமாதானம் விரைவில் ஏற்படும் என மூன்றில் ஒரு பங்கு மக்கள் நம்புகின்றனர்.
- எல்.ரீ.ரீ.ஈ. மீதான தடையை நீக்குவதற்கு யாழ்ப்பாண மக்களில் பெரும்பான்மையோர் ஆதரவாக விளங்குகின்றனர்.
- யாழ்ப்பாண மக்களின் கணிசமானளவு வீதத்தினர் எல்லா இனமக்களும் ஒன்றாக வாழமுடியும் என நம்பிக்கை கொண்டுள்ளனர்.
- இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தத்தைத் தீர்ப்பதற்கு சர்வதேச மூன்றாந்தரப்பு சம்பந்தம் அவசியம் என நம்பப்படுகிறது.
- இலங்கையின் சமாதான நடைமுறைக்கு நோர்வே உதவிக்கு உயர்வான அங்கீரமுள்ள அதேவேளை, இந்தியா சம்பந்தப்படுவது பற்றி ஒப்பீட்டளவில் குறைந்த அங்கீகாரமுள்ளது.
- யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கத்தில் மக்கள் மத்தியில் பெருமளவான திருப்தியுள்ளது.

# சமயப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்த 'ஆத்மஜோதி' முத்தையா அவர்கள்

'ஆத்மஜோதி' முத்தையா அவர்களின் நினைவு தினத்தையொட்டி இவ்வாக்கம் பிரசுரமாகிறது.

"இறைவன் எம்மைப் படைத்தது தன்னை வழிபட்டு முத்தியடைவதற்கே" என்பது நாவலர் பெருமானின் அருள் மொழியாகும். "இறைவன் என்னை நன்றாகப் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யும் மாறே" என்பதும், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதும் திருமூலர் வாக்குகள்.

இந்த மூன்று கோட்பாடுகளையும் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவா 'ஆத்மஜோதி' முத்தையா அவர்கள். 'ஆத்மஜோதி' பத்திரிகைமூலம் அவர் சைவத் தமிழ்மக்களை இறைவழிப்படுத்தினார். அப்பத்திரிகை நாவலப்பிட்டியை தலைமையிடமாகக் கொண்டு அச்சிடப்பட்டது.

முத்தையா அவர்கள் ஏழாலையில 1918ஆம் ஆண்டு பிறந்தார். இலந்தகட்டி ஞானவைரவரைக் குலதெய்வமாகக் கொண்ட நாகமணி தம்பதியின் மாதவம், முத்தையா அவர்களை பிற்காலத்தில் ஞான சுரவியாக, அன்பு மணியாக, சமயப் பிரசங்கியாக மிளிரவைத்தது. பெற்றோர் மக்கட் பேற்றில் இறைவனை ஈடுபடுத்த முற்றவம் புரியவேண்டும் என்பதற்கு இது உதாரணமாகும்.

முத்தையா அவர்கள் இளமைக் காலம் தொட்டு இறைபக்தி மிகுந்தவர். இதனால் ஆசிரியப் பயிற்சியை ஆசிரிய கலாசாலையில் பெறும்போதே சக மாணவர்களுடன் நல்லூர்க் கந்தனை இடைவிடாது வணங்கிவந்தார்.

முதன் முதலாக ஆசிரியத் தொழில் நாவலப்பிட்டி கிறிஸ்தவ கல்லூரியில் கிடைத்தது. பின்பு கதிரேசன் கனிஷ்ட பாடசாலையில் கடமையாற்றும் வாய்ப்புக்கிடைத்தது. இக்காலத்தில் பாடசாலைகளிலும் மலையகம் எங்கும் சைவப் பிரசங்கமும் பஜனைகளும் செய்து, மக்களை சமய விழிப்படையச்செய்தார்.

நாவலப்பிட்டி கதிரேசன் ஆலயம், முத்துமாரியம்மன் ஆலயம் ஆகியவற்றில் வெள்ளிக்கிழமைகளில் கூட்டு வழிபாடும், பெரியபுராணம், கம்பராமாயணம், பாரதம் போன்றவற்றை மக்கள் விளங்கும் விதமாகப் பிரசங்கம் செய்தார்.

*சிவநெறிக் கலாநிதி*
**ஸ்ரீவிசுவாம்பா விசாலாட்சி மாதாஜீ**

இவர் சிறந்த ஆசிரியராக விளங்கினார். மட்டக்களப்பு, திருமலை, யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பல இடங்களிலும் கூட்டுப் பிரார்த்தனைகள நடத்தினார்.

"திருமுறைக் காட்சி ஈழத்துச் சித்தர்கள், ஏழாலை உபநிடதக் கதைகள்" உட்பட பல நூல்களை இயற்றினார்.

வெளிநாடுகளிலும் அவரது சமயப பணிகள் தொடர்ந்தன. தாம் சென்ற நாடுகளில் தியான, யோக பிரார்த்தனைப் பயிற்சிகளை நெறிப்படுத்தினார். மேலும் ஆங்காங்கு இந்துசமயப் பேரவை போன்ற அமைப்புகளை நிறுவியதுடன் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இனக்கலவரத்தின் போது ஆத்மஜோதி நிலையமும் அங்கிருந்த பல்லாயிரம் நூல்களும் எரிக்கப்பட்டன.

அச்சமயத்தில் பேரினவாதிகளின கொடுஞ்செயல்களில் இருந்து தமிழர்களைக் காப்பாற்ற இறைவனை வேண்டி அவர் பாதயாத்திரை செய்தார். மக்களையும் இதில் பங்குபற்றச் செய்து அகண்ட நாமஜெப பஜனைகள் செய்தார். கிளிநொச்சி பகுதியில கடும் வரட்சி நிலவியபோது தவத்திரு.வடிவேல் சுவாமிகள், கதிரவேல் அப்புஜி, இசைமணி சிவஞானம் மகாதேவா சுவாமி மற்றும் கிளிநொச்சி மக்கள் ஆகியோருடன் இணைந்து 'ஆத்ம ஜோதி' முத்தையா அவர்கள் தாயுமானவர் சுவாமிகள் மழைவரப் பாடிய பாடலை பஜனை செய்யவும் கிளிநொச்சியில் மழை பெய்த காட்சி வர்ணிக்க முடியாத ஒன்றாகும்.

இறுதிவரை முத்தையா அவர்கள் நைட்டிகப் பிரமச்சாரியாகவே வாழ்ந்து கடைசியில் அமரத்துவம் அடைந்தார். நாமும் அவர் காட்டிய வாழ்க்கைப் பாதையில் பயணித்து வீடுபேறு பெற்று உய்வோமாக.

# நல்லூரில் நாய்கள் ஒழிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.22

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கையில் மாநகர சபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர் -

நல்லூர் ஆலய வீதிகளில் கட்டாக்காலிகளாக நடமாடும் நாய்கள் பக்தர்களை கடித்த சம்பவங்கள் உற்சவகாலத்தில் இடம்பெற்றன. இதனையடுத்தே கட்டாக்காலி நாய்களை பிடிக்கும் நடவடிக்கையை யாழ் மாநகர சபை ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஓ-180)

# சாயி சிந்தனை



## சாதன வழிகள்

ஒரு சாதாரண விலைபோகாத குச்சியை நெருப்பில் இட்டால், அதன் வடிவத்தை இழந்து சிவந்த நெருப்புத் துண்டாக மாறுகிறது. ஒரு துளி தண்ணீரை உள்ளங்கையில் வைத்துக்கொண்டால் அது உலர்ந்து ஆவியாக மாறுகிறது. அதே துளி கடலில் கலக்கும் போது, கடலின் தன்மையை அடைகிறது.

இதேபோல வாழ்க்கையில் ஈடேற வேண்டுமென்றால், நம்மிடமுள்ள இறைத்தன்மையை அறிந்த கொள்ளவேண்டுமெனில், கடவுளுக்கு அருகில இருக்க வேண்டும். அப்போது நமது ஆத்மாவை நாமே அறிய இயலும். இறைவனை அறிந்தகொள்ள மந்திரங்கள், தந்திரங்கள், ஜப, தப பயிற்சிகளை மட்டும் மேற்கொள்ளுவது நேரத்தை வீணாக்குவதாகும். இத்தகைய கர்மங்களால், சடங்குகளால் மட்டும் இறைவனை அடைதல் என்பது மிகவும் கடினம்.

இறைவனை நேசித்து அவரருகில் சென்றால்தான் பயனுள்ள ஏதாவதொன்றைச் சாதிக்க இயலும். அதற்காக சாதனைகள் எதுவும் புரியக்கூடாது என்று கூறவில்லை. இந்தச் சாதனைகள் அனைத்தும் சத்கர்மங்கள். இவை நேரத்தைப் புனிதமாக்குகின்றன. பூஜைகள் செய்யவேண்டும். பஜனைகள் பாடவேண்டும். ஆன்மீகப் பயிற்சிகள் செய்யவேண்டும். ஆனால், எல்லாவற்றிலும் முக்கியமாக சேவையில் நாம் கவனம் செலுத்தாவிடில் இவையனைத்தும் பயனற்றதாகும். தவம் செய்வது இறைவனைத் திருப்திப்படுத்தவா? இறைவன் திருவுள்ளத்தை நீ புரிந்துகொண்டால் உனது தவம் நிறைவேறியதாகும். அன்பான சேவை நல்வழி காட்டும்.

*ஆதாரம்:சனாதனசாரதி*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அருளானந்தம் குகநேசபிள்ளை என்பவரது தேசிய அ.அட்டை (இல.502833472V), விசேட அடையாள அட்டை என்பன நாய்க்குட்டியான் வாய்க்காலுக்கும் நாரந்தனைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிறிஸ்கந்தராசா, நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7353)

எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழைச் சேர்ந்த செல்லத்துரை கஜேந்தினி என்பவரின் தேசிய அ.அ. (இல. 826922214V), விசேட அ.அட்டை (இல.091034472), வினோதினி என்பவரின் விசேட அடையாள அட்டை, திறப்பு என்பன கொடிகாமம் பஸ்நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கொடிகாமம் ஸ்ரீ வெற்றிலைக் கடையில் ஒப்படைத்துதவவும். (7351)

எரந்தனை வடக்கு, புத்தூரைச் சேர்ந்த மனோகரன் என்பவருடைய விசேட அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை, சிறுதொகைப் பணமும், சில பற்றுச்சீட்டுக்களும் புத்தூருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரிக்கு தபால்மூலம் அனுப்பிவைக்கவும். சன்மானமாகப் பணத்தொகையைப் பெற்றுக்கொள்ளவும். (7355)

உடுவில் தெற்கு, பாலாவோடை, சுன்னாகத்தைச் சேர்ந்த மகாலிங்கம் விநாயகமூர்த்தி என்பவரது தேசிய அடையாள அட்டை (790973305V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7350)

நீர்வேலி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த கந்தையா யாசுதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.830110160V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கோப்பாய்ச் சந்திக்கும் நீர்வேலிச் சந்திக்குமிடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ள யூனியன் தொலைத்தொடர்பு நிலையத்தில் ஒப்படைத்துதவவும். (7347)

கார்த்திகேசு வானதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை, (இல.715160544V), விசேட அடையாள அட்டை என்பன யாழ்நகரப் பகுதிக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும் லக்கி ரெக்ஸ், இல.182, நவீனசந்தை, யாழ்ப்பாணம். (7356)

## மணமகள் தேவை

1972ஆம் ஆண்டு உத்தராடம் நட்சத்திரம், தற்போது LONDONஇல் தங்கியுள்ள, DIPLOMA IN ELECTRICAL AND ELECTRONIC ENGINEERING தகைமையுள்ள மணமகனுக்கு தங்குமிட உரிமையுடன் SPONSOR செய்யக்கூடிய பொருத்தமான மணமகள் தேவை. தொடர்பு: வை.விஜயபாஸ்கரன், இல. 39, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (7303)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 34 வயதுடைய, 8இல் செவ்வாய், திருவாதிரை, நற்குணமுள்ள, சிவந்த நிறமுடைய பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. வெளிநாடு Sponser செய்யக்கூடியவர் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல: 1610, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (7335)

## இந்தியாவிலிருந்து வந்த 9 பேர் நெடுந்தீவில்

யாழ்ப்பாணம்,ஓக.22

இந்தியாவிலிருந்து கடல்வழியாக 9 பேர் கடந்த திங்கட்கிழமை நெடுந்தீவுக் கரையில் வந்து இறங்கியுள்ளனர். இவர்களை இந்தியாவிலிருந்து ஏற்றி வந்த இரு படகுகள் நெடுந்தீவுக் கரையில் இவர்களை இறக்கிவிட்டுச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

திருகோணமலை, வவுனியா மற்றும் யாழ்.மாவட்டங்களைச் சேர்ந்த இவர்களில் 2 ஆண்களும், 3 பெண்களும், 4 பிள்ளைகளும் அடங்குவர்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் இவர்களுக்கான உணவு வசதிகளை வழங்கியுள்ளார். தற்போது இவர்கள் அனைவரும் நெடுந்தீவில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(ஓ-8)

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்களும், குளிர்சாதனப்பெட்டி மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (இந்து ஆரம்ப பாடசாலை அருகில்). (7299)

தாவடி தெற்கில் பாடசாலைகள், பிரதான வீதிகள், ஆலயங்களிற்கு அண்மித்ததாக, நானாவித தேவைகளுக்கேற்ற, விசாலமான காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.பத்மநாதன், சுதுமலை வீதி, தாவடி தெற்கு. (தினசரி பி.ப. 5.00இற்கும் 7.00இற்கும் இடையில்). (7283)

மொறிஸ் ஒக்ஸ்போட் டீசல் கார் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். தொடர்பு: த.குமாரசாமி, 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (7315)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கையில் பிரிவிடுதல் உறுதி உடைய 1/4 பரப்புக் காணி. நாலு பக்கமும் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி து.ராஜேஸ்வரி, புதிய இலக்கம் 33, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (7345)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

பெறுமதிமிக்க பொருள்களுடன் சிறிய கைப்பையொன்று தென்மராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் வாகன உரிமையாளர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் தென்மராட்சி சிற்றூர்திச் சேவைச்சங்கத்தில் ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (C/23250)

## கோழித்தீன் விற்பனை

Original Prima கோழித்தீன்கள் புதிய விலைகளில்: Layer 1060/-, Broiler starter F.C. 1670/-, Broiler Finisher F.C. 1600/-. 20 Bag எடுப்பவர்களுக்கு விலைக் கழிவுண்டு. தொடர்பு 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7251)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Broiler குஞ்சுகள், Prima பேட்டுக் குஞ்சுகள் இன்று 22.08.2002 மாலை விநியோகிக்கப்படும். முதல் நாள் தடுப்புமருந்து இலவசம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (7254)

# மரண அறிவித்தல்கள்

## பசுபதி யோகநாதன்

(இளைப்பாறிய நடத்துநர், இ.போ.ச.)

அளவெட்டி, கும்பழாவளை மேற்கைச் சேர்ந்த பசுபதி யோகநாதன் அவர்கள் நேற்று(21.08.2002) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் நாகபூசணியின் அன்புக் கணவரும் சகுந்தலா(கனடா), சாந்தினி(யாழ்.போதனா வைத்தியசாலை - FHO), சங்கீதா(யாழ்.பல்கலைக்கழகம் - கலைப்பீடம், இரண்டாம் வருடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாதன்(கனடா) அவர்களின் அன்பு மாமனாரும் கமலாதேவி அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தம்பியையா அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(21.08.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கும்பழாவளை மேற்கு,*
*அளவெட்டி மத்தி.* (7348)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கலாபூஷணம்

## திருமதி தர்மவதி குமாரசுந்தரம்

*(ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி)*

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கல்கிசை, 34 / 20, தக்ஷினாராமமாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை கலாபூஷணம் திருமதி தர்மவதி குமாரசுந்தரம் அவர்கள் 20.08.2002 செவ்வாய்க்கிழமை கல்கிசையில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி தேன்மொழி குகமூர்த்தி(மகள்)
*T.P: 074 - 204592.*

(7352)


# ராதா மின்சார மருந்து

**போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்!**

கடந்த 60 ஆண்டுகளாக ராதா மின்சார மருந்தைத் தயாரித்து வழங்கி மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளோம். ராதா மின்சார மருந்தின் அமோக விற்பனையைக் கண்டு - சில போலி வியாபாரிகளும், "ராதா மின்சார மருந்து" என்ற பெயரில், அதேபோன்ற பெட்டிகளில் போலி மருந்தினைத் தயாரித்து விற்பனை செய்கின்றனர். போலி மருந்து தயாரிப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்பதை இத்தால் தெரிவிக்கின்றோம். பொதுமக்கள் போலிகளைக்கண்டு ஏமாறாமல் அசல் ராதா மின்சார மருந்தைக் கவனித்து வாங்கும்வண்ணம் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**எஸ்.சுப்பிரமணியம் & கோ**
34, ஆடியபாதம் வீதி,
நல்லூர்.

**எஸ்.சுப்பிரமணியம் & கோ**
160, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.

(7360)


# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 06.09.2002 for the undermentioned posts for Diploma in Physical Education Programme:

1. Visiting Lecturer in Physical Education for Athletics / Table Tennis / Volley Ball / Cricket / Badminton
2. Visiting Instructor in Physical Education for Netball / Basketball

| POSTS | RATE OF PAYMENT |
|---|---|
| Visiting Lecturer | Rs.300/- per hour |
| Visiting Instructor | Rs.150/- per hour |

Application forms and other details may be obtained from the Office of the Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka either in person or by sending a Money Order for Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna, together with a self - addressed stamped envelope 23x10cm in size.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR,**
University of Jaffna,
Sri Lanka.
20th August 2002. (C/23249)

# நீங்காத நினைவலைகள்

100ஆம் நாள



வெலிச்சோர்ப்பிள்ளை
அந்தோனிப்பிள்ளை *(அண்ணாவியார்)*

22 ※ 08 ※ 2002

அன்புத் தெய்வங்களே!
உங்கள் நினைவு எம்
நெஞ்சைவிட்டு என்றுமே
அகலாது!
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

5 ஆம் ஆண்டு



திருமதி மேரி யோசப்பின் (நேசம்)
அந்தோனிப்பிள்ளை

*எமது அன்புப் பெற்றோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (22.08.2002) வியாழக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

சவுந்தரநாயகம் (சந்திரன்) குடும்பத்தினர்.
திரு.திருமதி வில்லியம் புஷ்பராணி குடும்பத்தினர்,
மகேந்திரன் குடும்பத்தினர்.

*கல்லூரி வீதி, இளவாலை.* (7358)

## கடற்படையினரின் கெடுபிடிக்கு எதிராக

# அல்லைப்பிட்டி சோதனைச் சாவடிமுன் மறியற்போர் நடத்தப் பயணிகள் திட்டம்!

### கண்காணிப்புக் குழுவுக்கு முன்னறிவிப்புக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்22

**அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் கடற்படையினர் கட்டவிழ்த்து விட்டுள்ள கெடுபிடிகளைக் கண்டித்து எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட் கிழமை மேற்படி சோதனைச் சாவ்டி முன்பாக மறியற்போராட்டம் ஒன்றை தீவகப் பயணிகள் நடத்தவுள்ளனர். நேற்றுமுன்தினம் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் தீவகப் பிரிவினரிடம் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடி ஊடாக பயணிப்பவர்கள் கையளித்த கடிதத்தில்-இந்த மறியற்போர் குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வேலணை அலுவலகத்தில் தீவுப் பகுதிப் பயணிகளால் கையளிக்கப்பட்ட இந்தக் கடிதத்தின் பிரதிகள் யாழ்.அரச அதிபர் மற்றும் தீவகம் தெற்கு, ஊர்கா வற்றுறை, நெடுந்தீவு ஆகிய பகுதிகளின் பிரதேச செயலர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"இலங்கை அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் இராணுவ ரீதியான அழுத்தங்கள் குறைந்து, மக்களின் இயல்பு வாழ்க்கை புதுப்பொலிவுடன் உருவாகிவருவதை அவதானிக்க முடிகின்றது. ஆனால், தீவுப்பகுதி நோக்கிவரும் அரச ஊழியர்கள், ஆலயங்களுக்குச் செல்வோர் மற்றும் சாதாரண மக்கள்மீது அல்லைப்பிட்டி கடற்படையினர் தமது சோதனைக் கெடுபிடிகளை கடந்த சில வாரங்களாக மீண்டும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். பல இன்னல்கள் மத்தியில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு இது மேலும் மேலும் இன்னல்களையும், மன உளைச்சலையும், காலதாமதத்தையும் உண்டுபண்ணுவதுடன், அரச நிறுவனங்களின் செயற்பாடுகளையும் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் பாதிப்படையச் செய்கின்றது.

"எனவே, பயணிகள் மீதான கெடுபிடிகளைக் கண்டித்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அல்லைப்பிட்டி சோதனைச் சாவடி முன்பாக வீதிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு, எமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவிக்கவுள்ளோம். எனவே, மேற்படி போராட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரதும் பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டிநிற்கின்றோம். மேலும், புரிந்துணர்வு ஒப்பந்ததை மதித்தும், சட்டங்களுக்கு அப்பால் மனிதாபிமான முறையிலும் முறையான பயணிகள் போக்குவரத்துக்கு வழிசமைத்திட அனைத்துத் தரப்பினரையும் மிகவும் அன்புடனும், பணிவுடனும் கேட்டுக் கொள்கின்றோம்" - என்றுள்ளது.

இந்த விடயம்குறித்து, வேலணை கடற்படை கட்டளை அதிகாரியுடன் தொடர்புகொண்டு தான் பேசுவதாகவும் -

கடற்படை அதிகாரியின் பதிலை வியாழக்கிழமைக்குள் (இன்று) தெரிவிப்பதாகவும் -

கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி, தன்னிடம் மேற்படி கடிதத்தைக் கையளித்த தீவகப் பயணிகளின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்ததாகக் கூறப்படுகிறது.

(ஒ-167)

## நல்லூரில் வாகன அத்துமீறல்

# ராணுவ அதிகாரிகளுக்கு ஆணையாளர் கடிதம்

வலி.வடக்கு,ஓக.22

நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் ஆலய வீதிகளில் வாகனங்களில் செல்லவேண்டாமென இராணுவம் மற்றும் பொலீஸாரிடம் யாழ். மாநகர சபை ஆணையாளர் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

நல்லூர் ஆலய உற்சவம் ஆரம்பமானதைத் தொடர்ந்து ஆலயத்திற்கு செல்கின்ற அரசடி வீதிச் சந்தி, கோயில வீதி, சங்கிலியன் வீதிச்சந்தி, பருத்தித்துறை வீதியில் யாழ்.மாநகர சபை முன்பாக, கோயில் வீதி, பிராமணன் கட்டுச்சந்தி, செட்டித்தெரு ஆகிய இடங்களில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு தொண்டர்கள் கடமையாற்றியபோதிலும் இதன் ஊடாக படையினரின் வாகனங்கள் அத்துமீறிச் சென்றுவந்ததாகவும் -

இதனைக் காரணமாகக் கூறி ஏனையவர்களும் வாகனங்களைக் கொண்டுசெல்ல முனைந்து பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், உற்சவகால சிறப்புச் செயலணி ஒழுங்காற்றுப் பேரவை ஆணையாளருடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து ஆணையாளர் சீருடையினரின் வாகனங்கள் ஆலயப் பகுதியில் அத்துமீறிச் செல்வதைத் தடைசெய்யும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஒ-86)

## உடுவில் விவசாயிகளுக்கு!

வலிகாமம் தெற்கு,ஓக.22

2002ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துகொண்ட உடுவில் கமநல கேந்திர நிலையத்துக்குட்பட்ட விவசாயிகளின் ஓய்வூதியப் பத்திரங்கள், சான்றிதழ்கள் என்பன கமநல கேந்திர நிலையத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி திட்டத்தில் இணைந்து கொண்ட விவசாயிகள் தமக்குரிய மேற்படி ஆவணங்களை கமநலநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வி.இளங்குமரனுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-152)

## ஆத்மஜோதி நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.22

'ஆத்மஜோதி' நா.முத்தையா ஞாபகார்த்தமாக அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதலும் பன்னிரு திருமுறைப் பாராயணமும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஏழாலை இடிந்தகட்டி ஸ்ரீ பாதாள வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வைத் தொடர்ந்து பண்டிதமணி, கலாநிதி மு.கந்தையா நினைவுக் கூட்டமும் இடம்பெறும்

(ஒ-4)

# இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சித் திட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.22

குடாநாட்டிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கும் திட்டம் ஒன்றினை மனிதவள அபிவிருத்தி அமைச்சு நடைமுறைப் படுத்தவிருக்கின்றது.

இதற்கமைய கொழும்பில் இருந்து இங்குவந்த அமைச்சு அதிகாரிகள் குடாநாட்டில் பிரதேச செயலக ரீதியாக இளைஞர், யுவதிகளின் விவரங்களைச் சேகரித்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

முதற்கட்டமாக குடாநாட்டில் உள்ள 10 பிரதேச செயலகங்களில் இருந்தும் தலா 45 பேர் வீதம் 450 இளைஞர், யுவதிகளின் விவரங்கள் திரட்டப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவியுடன் இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்குரிய தொழிற்பயிற்சிகள் விரைவில் வழங்கப்படவிருப்பதாகவும் -

தொடர்ந்து ஏனைய இளைஞர், யுவதிகளுக்கும் இத்திட்டத்தின்கீழ் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் -

அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-4)

## திருடியவரை பிடித்த மாணவி

கரவெட்டி,ஓக.22

கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடிப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவி ஒருவரின் சைக்கிள் கூடையில் இருந்த கைப்பையைத் திருடமுயன்ற வயோதிபர், சம்பந்தப்பட்ட மாணவியிடம் கையும்மெய்யுமாகப் பிடிபட்டார்.

பிடிக்கப்பட்ட வயோதிபரின் அடையாள அட்டையைக் கைப்பற்றிய மாணவி, அதனை வடமராட்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் பணிமனையில் ஒப்படைத்ததாகவும் -

அதனைத் தொடர்ந்து புலிகள் அந்த வயோதிபரை அழைத்து அறிவுரை கூறி அனுப்பியதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-70)

# உடுவில்முதல் இணுவில்வரை துர்நாற்றம் வீசுகிறதாம்!

### விவசாய சம்மேளனம் முறைப்பாடு

வலிகாமம் தெற்கு,ஓக22

உடுவில் பிரதேச சபையின் அருகில் இருந்து இணுவில்வரை தோட்டக் காணிகளை ஊடறுத்துச் செல்லும் வீதியை அண்டிய பகுதிகளில் சுகாதாரக் கேட்டை விளைவிக்கும் வகையில் துர்நாற்றம் வீசுவதாக இணுவில் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேற்படி வீதியில் உள்ள வெற்றுக் காணியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் எழும் துர்நாற்றமும் -

மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தின் பின்புறமாக - இராமநாதன் கல்லூரிக்கு சொந்தமான காணியில் அமைந்துள்ள குடியிருப்புக்களின் அண்மையில் உள்ள பகுதிகள் கழிப்பிடமாகப் பயன்படுத்தப்படுவதால் ஏற்படும் துர்நாற்றமும் -


சகிக்கமுடியாத நிலையில் இருப்பதாக விவசாய சம்மேளனம் சுட்டிக் காட்டியுள்ளது.

தோட்டக் காணிகளுக்கு வேலிகள் அமைக்கப்பட்டாலும் அவை அகற்றப்பட்டு மலசலங்கள் கழிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதனைச் சீர்படுத்த தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென மேற்படி விவசாய சம்மேளனம வலிகாமம் தெற்கு பிரதேச செயலரிடம் முறையிட்டுள்ளது. (ஒ-152)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(மஞ்சத் திருவிழா)



## முத்துக்குமரனின் மஞ்சம்

தீயின் ஒளியில் வீதி சுற்றும் மஞ்சம்
தீமையின் விழியில் வீபூதி கொட்டும் மஞ்சம்
நோயின் வலியை நுழைந்து விரட்டும் மஞ்சம்
தாயின் அழகை நினைந்து காட்டும் மஞ்சம்
சூழும் கலியை துரத்தும் சுந்தர மஞ்சம்
சுதந்திரக் கனியை நீட்டும் சந்தன மஞ்சம்
மூளும் ஏழ்மையை முடமாக்கும் முத்து மஞ்சம்
துயரங்கள் கலைக்க வீதியில் அசையும் மஞ்சம்
தூய்மையுடன் முத்துக்குமரனை சுமக்கும் நல்லூர் மஞ்சம்!

இருபாலை புலேந்திரராச முதலியார்.

## அருள்வாக்களிப்பாய்!

மஞ்சத்தில் பவனி வரும் முருகா
அடியவர் துயர் தீர்க்க வருவாய்
அஞ்சுதல் இனியில்லை என்றே - உந்தன்
அடிதொழ அருகிருந்து மலர் தூவுகிறோம்
விஞ்சு புகழ் ஈழத்தில் - உனை
வெல்ல யாருண்டு கூறு! - இனியும்
கெஞ்சிக் கெடிகலங்கான் தமிழன் - உந்தன்
வேலின் துணையிருந்தால் - முருகா
செஞ்சிமிழ் வாய்திறந்து - இந்த
செகத்துக்கு அருள் வாக்களிப்பாய்!

எம்.சுயர்சன்
கோண்டாவில்.

## அருட்காட்சி தாராய்!

*தஞ்சமென வந்துன் தாள் பணிந்திட்டோம் ஐயா!*
*மஞ்சத்திலே அமர்ந்து அருட்காட்சி தாராய்!*
*பஞ்சப் பிணி தீர்த்து பக்தர்களுக் கருள் புரியும்*
*அஞ்சேலென வந்து அபயமளிக்கும் வேலே சரணம்!*

கவிமணி இராசையா ஸ்ரீதரன்.

## வந்தருள்வாய்...

மஞ்சமதில் ஏறி வந்து
மக்கள் குறை தீர்த்தருள்வாய் - மயிலோனே
பஞ்சம்,பசி தீர்த்திடவே
மஞ்சமதில் வந்தருள்வாய் - குமரேசா
அல்லலுறும் உன் அடியவர் குறைதனைப் போக்கிடவே
அன்புடனே பறந்தோடி வந்தருள்வாய் - குமரா
சாந்தி, சமாதானம் மலர்ந்திடவே
சடுதியாய் வந்தருள் புரிவாய் - நல்லைக்குமரா

பிரதாப்.

## கொடுமை களைவாய்!

*மஞ்சள் நிலவொளியில் மஞ்சம் அசைந்திட*
*மனுக்குலம் காப்பான் முத்துக் குமரன்*
*கொஞ்சும் தமிழ் ஒளியில் குவலயம் சுழன்றிட*
*கொடுமைகள் களைவான நல்லைக் குமரன*

பு.திலீப்காந்த்.

## அஞ்சேலெனக் காப்பாய்!

பஞ்சப் பிணிபட பாழும் போர்பட
பாரில் புண்ணிய முருவாக
தஞ்சத் துணையென தகரும் வினையென
தருவா யருளென விரைவாக
நஞ்சு மிடற்றுறை நாதன் விதந்துரை
நாயக னுறைநல்லைப் பரமேசு
அஞ்சே லெனதிரு மஞ்சம் தனிலிரு
சக்திகள் துணையுடன் வருவாயே!

- அனலையூர்ச் சேந்தன்.

## தஞ்சமென்று வந்தோம்

நெஞ்சமதில் உன்னை வைத்து
சிந்தும் விழிதான் சுமந்து
தஞ்சமென்று வந்து நின்றோம்
கொஞ்சும் வள்ளி மணாளனே
பஞ்சம் பசி போக்கிடுவாய்
வஞ்சங்களை நீக்கிடுவாய்
கெஞ்சி நின்றோம் உன் பாதம்
மஞ்சத்தில் வந்து அருள் செய்வாயே!

தீ.பாரதி,
நாவற்குழி.

## நாவற்குழிப் பகுதியில்

# ஆளில்லாத வீட்டில் திருடியவர் பிடிபட்டார்

நாவற்குழிப் பகுதியில் ஆள்கள் இல்லாத வீடொன்றிலிருந்து கதவுகளைத் திருடிச் சென்ற நபர் விழிப்புக குழுவால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

நாவற்குழி சித்திவிநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் இரவுவேளை கதவுகளைத் திருடி அவற்றை லான்ட்மாஸ்டரில் ஏற்றிச் சென்றுகொண்டிருந்ததாகக் கூறப்படும் நபரை விழிப்புக்குழுவினர் மறித்து விசாரித்தபோது கதவுகளைத் திருடியதை அந்த நபர் ஒப்புக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதடிப் பகுதியைச் சேர்ந்த அந்த நபர் ஏற்கனவே அதே வீட்டில் திருடப்பட்ட 3 சோடி கதவுகளுக்குரிய பணமாக 3 ஆயிரம் ரூபாவை அப்பகுதி கிராம அலுவலர் முன்னிலையில் சம்பந்தப்பட்ட வீட்டின் பராமரிப்பாளரிடம் வழங்கியதாகவும் கூறப்பட்டது.

வீடுகளில் இருந்து பொருள்களைத் திருடும் சம்பவங்கள் அப்பகுதியில் தொடர்ந்து இடம் பெற்று வருவதை அடுத்தே விழிப்புக்குழுவினர் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-10)

## மருத்துவர்குழு திரும்பியது

யாழ்போதனா வைத்தியசாலைக்கு கடந்த 13ஆம் திகதி கண்சத்திர சிகிச்சையை மேற்கொள்ள வந்த பிரிட்டிஷ் வைத்தியர் குழு தமது பணிகளை முடித்துக் கொண்டு நேற்று பயணமாகியது.

அகதிகள் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவின் ஏற்பாட்டில், ஜேர்மன் உதவி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த இலவச சத்திரசிகிச்சை முகாமில் சுமார் 360 பேருக்கு கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

கண்சத்திரசிகிச்சையை மேற்கொண்டவர்களில் தேவையானவர்களுக்கு இக்குழுவினால் எடுத்துவரப்பட்ட செயற்கை 'லென்சுகள்' பொருத்தப்பட்டுள்ளன.

சனி, ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாள்களில் சராசரியாக நாளொன்றுக்கு 50பேர் வீதம் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் வவுனியா பொது வைத்தியசாலைக்கு விஜயம் செய்த இக்குழு அங்கே 54 பேருக்கு 'கற்றாக்' சத்திரசிகிச்சையை மேற்கொண்டதாகத் தெரிவித்த ஜேர்மன் உதவி நிறுவனத்தின் செயலாளர் பிரான்ஸிஸ் வேதநாயகமும், தலைவர் மல்கம் பெரேராவும், இந்த இலவச மருத்துவ முகாம் எதிர்காலத்தில் மன்னார், மட்டக்களப்புப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தனர்.

சத்திரசிகிச்சையை மேற்கொள்ள வந்த வைத்தியர் குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலையில் பயின்று வரும் வைத்திய பீட மாணவர்களுக்கும் விரிவுரைகளை வழங்கி உதவி செய்தனர். (ஒ-15)

## பூனை கடித்து பெண் மரணம்!

யாழ்ப்பாணம்,ஓக.22

ஒரு மாதத்திற்கு முன் இரவு பூனை ஒன்றினால் கடியுண்ட பெண் ஒருவர் அதற்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்தைப் போடத் தவறியதால், பாதிப்புக்காளாகி உயிரிழந்தார்.

குடத்தனை கரையோரப்பகுதியைச் சேர்ந்த தர்மசேன அநுராவதி (வயது 35) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

கடந்த 16ஆம் திகதி இவருக்குக் காய்ச்சல், மூச்சுத் திணறல் ஏற்பட்டதையடுத்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அன்றைய தினமே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தி ஐந்து நாள்களின் பின் நேற்று அதிகாலை அவர் அங்கு மரணமானார்.

பூனை கடித்ததையடுத்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மூன்று நாள்கள் சிகிச்சை பெற்றும், ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்து போடாமலே அனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

## திருத்தம்

**20.08.2002ஆம் திகதிய 'உதயன்' 10ஆம் பக்கத்தில் எம்மால் விளம்பரம் செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலில் -**

**மீளளிக்கப்படாத கேள்விப் படிவப்பணம் - ரூபா 250.00**

**மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் - ரூபா 5000.00**

**எனத் திருத்தி வாசிக்கவும்.**

தலைவர்,
**வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.**

(C/23252)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அந்தோனிமுத்து வரோணிக்கா

கரவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி அந்தோனிமுத்து வரோனிக்கா நேற்று(21.08.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து(ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் மரியதாஸ் மனோகரனின் அன்புத் தாயாரும் மேரி எம்மாவின் மாமியாரும் மரியசோபினி (ஜேம்ஸ்கரன், எசாந்தியா, றூவின் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(22.08.2002) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கரவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அ.மரியதாஸ் மனோகரன்.
(ஓய்வுபெற்ற பொலீஸ் அலுவலர்)

*கரவெட்டி.* (7364)

## வேலுப்பிள்ளை வீரகத்தி

(ஓய்வுபெற்ற அதிபர்)

இடைக்குறிச்சி, வரணியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வீரகத்தி(ஓய்வுபெற்ற அதிபர்) நேற்று(21.08.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமுதாந்தையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிதம்பரநாதர் மற்றும் சித்தர், பாறுபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசகுலேந்திரன்(ஜேர்மனி), மனோன்மணி, சிற்சபாணந்தம், ஸ்ரீதரன், சிவஞானசோதி, சிவசிதம்பரம், குமாரவேற்பிள்ளை ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவராணி(ஜேர்மனி), சின்னையா, இரஞ்சிதமலர், தேவகுமாரி, திருப்புவனம்பிகாதேவி, கௌரி ஆகியோரின் மாமனாரும், வைதேகி(ஜேர்மனி), சிவகுமார்(ஜேர்மனி), ஜனகன்(ஜேர்மனி), தசரதன் (ஜேர்மனி), அருந்ததி, காயத்திரி, கீர்திகா, பிரியங்கா, கஜேந்திரன், அருண்யா, கேசவன், யசோதா, யசீதா, நிரோஜன், பவித்திரன் ஆகியோரின் பேரனும் றோஷானின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(21.08.2002) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வீ.குமாரவேற்பிள்ளை.
(மகன் - ஆசிரியர், பளை மத்திய கல்லூரி)

*இடைக்குறிச்சி, வரணி.* (7375)



வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி

**திருவருள்மிகு பத்திரகாளி சுவாமியுடனுறை**

**ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தான**

**வசந்தமண்டப ஸ்தூலலிங்க**

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் சித்திரபானு வருடம் ஆவணிமாதம் 7ஆம் திகதி நாளை (23.08.2002) வெள்ளிக்கிழமை பிரதமைதிதியும், சதயநட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 8 மணி 01 நிமிஷம் முதல் 9 மணி 37 நிமிஷம் வரையுள்ள சந்திரஹோரையுடன் கூடிய கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வசந்தமண்டப கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் அம்பிகை அடியார்கள் அன்றும் அதற்கு முதல்நாள் நடைபெறும் கிரியைகளையும் தரிசித்து ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் திருவருள் பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

### கிரியாகால நிகழ்வுகள்

22.08.2002 வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் கும்பாபிஷேக கிரியாரம்பம் அனுக்ஞை கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் வாஸ்து சாந்தி கடஸ்தாபனம் தூபி ஸ்தாபனம் ஹோமாவாசம், திபஸ்தாபனம், கும்பபூஜைகள் தீபாராதனை. 23.08.2002 வெள்ளிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு திரவிய ஹோமம் மஹா பூர்ணாகுதி பிரதான கும்பங்கள் வீதி பிரதிட்சிணம் காலை 8.00 மணி 01 நிமிஷமளவில் வசந்த மண்டப ஸ்தூபிகள் மஹா கும்பாபிஷேகம் தொடர்ந்து வசந்தமண்டப மூர்த்திகட்கு அபிஷேகம் தரிசனம் யஜமான அபிஷேகம் ஆசார்ய சம்பாவனை ஆசீர்வாதம், தீபாராதனை பிரசாதம் வழங்கல்.

*முக்கிய குறிப்பு :* வை கும்பாபிஷேக முகூர்த்தத்தோடு இராஜகோபுரத்துக்கு (ஆத்யேஷ்டிகாஸ்தாபனமும் அஸ்திவாரமும் நடைபெறும். இப்பணி ஆலய அறங்காவலர் முகதாவில் நடைபெறும்.

### குருமார்கள்

சிவாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் - இணுவில்
சிவஸ்ரீ ம.சோமசுந்தரக் குருக்கள் - இணுவில்
பிரம்மஸ்ரீ சே.சிவபாலசர்மா - இணுவில்
பிரம்மஸ்ரீ ம.தானுனாதசர்மா - இணுவில்
பிரம்மஸ்ரீ பிரசாந்தசர்மா - வட்டுக்கோட்டை
ஆலய பிரதமகுரு - ஆ.சிவகங்காதரன்
ஆலய அர்ச்சகர் - சி.நிறைஞ்சன்

மேற்படி இராஜகோபுர வேலைக்கு,

| | | |
|---|---|---|
| ஆலய நிர்மாணம் | : | ஸ்தபதி சண்முகராசா மோகனதாஸன் (குழுவினர்) அராலி மத்தி, வட்டுக்கோட்டை. |
| வர்ண வேலைகள் | : | கலாகேசரி கந்தையா சுந்தரலிங்கம் (குழுவினர்) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். |
| மங்கள வாத்தியம் | : | கோவிந்தசாமி புதல்வர்கள் (இணுவில்) |
| | | சின்னராசா புதல்வர்கள் (இணுவில்) |
| | | வி.கே.கானமூர்த்தி குழுவினர் (கோண்டாவில்) |
| | | வி.கே.பஞ்சமூர்த்தி குழுவினர் (கோண்டாவில்) |
| | | கதிரவேலு குழுவினர் (நவாலி) |

ஆலய நிர்மாண ஸ்தபதி சண்முகராசா மோகனதாஸன் அவர்களையும்,
வர்ணவேலை கலாகேசரி கந்தையா சுந்தரலிங்கம் அவர்களையும்
பொன்னாடை போர்த்து, தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்படுவர்.

(கும்பாபிஷேக தின நேர்முக வர்ணனையின் தொகுப்பு இரவு யாழ். சேவையில் ஒலிபரப்பப்படும்)

*ஒலி, ஒளி அமைப்பு :* ராசன் சவுண்ட் (சித்தன்கேணி)

(7366)

இவ்வண்ணம்
ஆலய அறங்காவலர்கள்.


வெப்பத்தை விரட்டலாம்......... குளிர் தென்றலை அனுபவிக்கலாம்..........

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்

ஒரு வருட உத்தரவாதம்

# நிப்போன் மின் விசிறிகள்

உயர்ந்த தரம், குறைந்தளவு மின்வலு, குறைந்த மின்கட்டணம்

26 மாதிரிகள் 40 வண்ணங்களிலிருந்து உங்கள் தெரிவு!




பொக்ஸ் விசிறிகள் | சுவர் விசிறிகள் | சுழலும் விசிறிகள் | மேசை விசிறிகள் | நிறுத்தி விசிறிகள்
கூரை விசிறிகள் | வெப்ப வெளியேற்றி விசிறிகள் | வளி குளிரூட்டி விசிறிகள்

# லங்கா நிப்போன்

தலைமைக் காரியாலயம்
இல. 18, கெய்சர் வீதி, கொழும்பு - 11.
தொலைபேசி 437735, 324726
தொலைநகல் 437736

கிளை
இல. 10, டிரிலோனி பிளேஸ், (பால்சாலையின் பின்புறம்)
பம்பலப்பிட்டி சந்தி, கொழும்பு - 4.
தொலைபேசி - 589992, 582365.

உத்தரவாதமுள்ள உற்பத்திகளுக்கு நிப்போன்
போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள், லங்கா நிப்போன் என்று கேட்டு வாங்குங்கள்

சிவமயம்

யாழ்.வேலணை வங்களாவடி

# ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்

## பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்



### கர்மாரம்பம்

காலம்:- 23-08-2002 வெள்ளி காலை 7.00 மணி.

### எண்ணெய்க்காப்பு

காலம்:- 24-08-2002 சனி காலை 9 மணிமுதல்

25-08-2002 ஞாயிறு பகல் 12 மணிவரை.

### கும்பாபிஷேகம்

காலம்: 26-08-2002 திங்கள் காலை 6.45 மணிமுதல் 7.30 மணிக்குள்.

*திருப்பணிச் சபை,*
வங்களாவடி, வேலணை.

(7374)

# விமான சேவை அறிவித்தல்

**EXPO** விமான சேவையின் வெள்ளி, சனி மாலை சேவையும், ஞாயிறு, திங்கள் காலை சேவையும் ரத்துச்செய்யப்பட்டுள்ளதால் அத்தினங்களில் பதிவுசெய்த பயணிகள் உடன் யாழ்.அலுவலகத்தில் தொடர்புகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

பயணிகளின் பயணச்சீட்டிலக்கம், அடையாள அட்டை இலக்கங்கள் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 11443 | 554452812V | 9791 | 300587308 |
| 11442 | M1945177 | 9789 | 009006334 |
| 10344 | VE794679 | 9792 | 037889172 |
| 11936 | 655120564V | 9819 | JS462850 |
| 11935 | A11591806 | 9821 | JS462459 |
| 1985 | 580757750X | 9823 | JS462458 |
| 10301 | 622582207V | 9820 | JS462851 |
| 11418 | 605460690X | 9822 | JS462460 |
| 1549 | (CHD) | 9824 | V11655442 |
| 1548 | 616980700V | 10334 | M1907788 |
| 1550 | (CHD) | 8713 | L3437329 |
| 1547 | 602000516V | 8712 | L3436890 |
| 6161 | M338634 | 10558 | M1142941 |
| 6162 | ML309934 | 11414 | 412760123 |
| 9790 | 01 5005223 | 11415 | VG094145 |

EXPO
AVIATION (PVT) LTD.
JAFFNA.

(C/23254)

# இதய அஞ்சலி



17-08-2002 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்பு மைத்துனர்

## Dr.த.இராசையா

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாருக்கு எங்களுடைய இதய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*ஸ்ரீரங்கம்,*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
செல்வராசா - கமலாம்பிகை
கனகசிங்கம் - புஷ்பவதி
சத்தியமூர்த்தி - லீலாவதி
சிவபாலன் - சாந்தகுமாரி
மயில்வாகனம் - ஜெகதாம்பிகை

(7372)

# மக்கள் வங்கியில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம்,ஒக.22

மக்கள் வங்கியின் பதவிநிலை உதவியாளர் (பயிலுநர்) நேர்முகப் பரீட்சைக்கு யாழ்மாவட்டத்தில் இருந்து 42 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 29ஆம் 30ஆம் திகதிகளில் கொழும்பு விஜேவர்த்தன மாவத்தையில் உள்ள மக்கள் வங்கியின் பணியாளர் பயிற்சிக் கல்லூரியில் இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சையில் தோற்றவுள்ளோரை தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விடுகைப்பத்திரம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய சான்றிதழ்கள், ஆவணங்களுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 42 பேரின் பெயர்கள் வருமாறு:-

*29ஆம் திகதி வியாழக்கிழமை*

★ காலை 8 மணிக்கு அழைக்கப்பட்டோர் - செல்வி என்.அருணகிரிராஜா, செல்வி பி.ஜெயக்குமார், எஸ். பகீரதி, செல்வி பி.மனோராஜ், செல்வி எம். மகேந்திரன், செல்வி எம்.ஸ்ரீதரன், எஸ்.ஜெறோன், பி.முருகதாஸ்.

★ காலை 9 மணிக்கு அழைக்கப்பட்டோர் - செல்வி எம்.சதாசிவசர்மா, என்.தனேஸ்,செல்வி எம்.எஸ்.யோகேந்திரன், செல்வி இசற்.கணேஸ்வரன், செல்வி எஸ்.எஸ்.சிவந்தா,செல்வி வி.பரமநாதன், பி.சீராளன், செல்வி எஸ்.சிவராஜா,

★ முற்பகல் 11 மணிக்கு அழைக்கப்பட்டோர் - என்.அனுஷா, செல்வி எவ்.எக்ஸ்.ஜெயச்சந்திரா,

★ நண்பகல் 12.15 மணிக்கு அழைக்கப்பட்டோர்:-கே.கோபிநாத், வி.நரேந்திரன், ரி.எழில்மேனன், செல்வி பி.கைலாசபதி

*30ஆம் திகதி வெள்ளிக்கிழமை*

★ காலை 8 மணிக்கு அழைக்கப்பட்டோர் - செல்வி என்.கனகலிங்கம், ஏ.எம்.நிர்மலா, ஜி.ஹைறின் ஆர்க், எஸ். கிருஸ்ணகுமாரன், எஸ். அகல்யா, எஸ்.எஸ்.பகீரதன், ஜி.கஜமுகன், என்.உதயசேகர்,

★ காலை 9 மணிக்கு அழைக்கப்பட்டோர் - எஸ்.ஆரணி, செல்வி பி.பாலசுப்பிரமணியம், திருமதி வி.குமரன், செல்வி எஸ்.சின்னத்தம்பி.

★ முற்பகல் 11 மணிக்கு அழைக்கப்பட்டோர் - பி.ஹரிகரேந்திரா, ஆர். கமலமீரா, செல்வி ஜீ.மாணிக்கவாசகர், ஆர்.கம்சலா.

நண்பகல் 12.15 மணிக்கு அழைக்கப்பட்டோர் - செல்வி எஸ். நடராஜா, ஜே.முத்துக்குமாரி, எஸ். கோகுலகாந், செல்வி பி.ஆர்.செந்திநாதன்.

நேர்முகப் பரீட்சை தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற விரும்புவோர் வங்கியின் யாழ். மாவட்ட தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

# அரச அலுவலர்களுக்கான கணனிப் பயிற்சி செயல்முறை

யாழ்ப்பாணம்,ஒக.22

அரச அலுவலர்க்கான தொலைக் கல்வி கணனிப் பயிற்சி செயல்முறை இன்று யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் 12 மணிவரை ஒரு பிரிவினருக்கும் ஒரு மணி முதல் 4மணிவரை மற்றொரு பிரிவினருக்கும் செயல்முறை இடம்பெறும்.

இன்ரநெற், ஈ-மெயில் ஆகியன தொடர்பான விளக்கசெயல்முறையே இடம்பெறவுள்ளது. (ம-3)

# நல்லூரில் இலங்கை வங்கி கருமபீடம்

இலங்கை வங்கியின் விசேட கருமபீடம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நல்லூரில் திறந்துவைக்கப்படவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தையொட்டித் திறக்கப்படும் இந்த விசேட கருமபீடம், இலங்கை வங்கியின் 63 வருடகால சேவையை நிறைவு செய்வதை நோக்காகக் கொண்டதாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-12)

# சாயிசேவா நிலையத்தில் நிகழ்வுகள்

யாழ்ப்பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் ஓம்காரம், காயத்திரி ஜெபம், பண்ணிசை, சொற்பொழிவு ஆகியன இடம்பெறவுள்ளன. நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறும்.(ம-3)

# பிரிவுத்துயர் பகிர்கின்றோம்

எமது பொது நூலக உறுப்பினர் அ.இளங்கோவன்,
எமது பொது நூலகத்தின் நூலகர் அ.கீதாஞ்சலி
ஆகியோரது அன்புத் தாயார்

## திருமதி அ.கமலாதேவி

அவர்கள் நேற்று (21.08.02) புதன்கிழமை காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன், அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இணுவில் தெற்கு,*
*இணுவில்.* (C/23259)

இணுவில் பொது நூலகமும்,
சனசமூகநிலையமும்.

# மரண அறிவித்தல்கள்

## க.க.ஐயாத்துரை

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட க.க. ஐயாத்துரை அவர்கள் (21-08-2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பத்மநாயகி, காலஞ்சென்ற கமலநாயகி, கணேசன், நடேசன் (சிரேஷ்ட வரி உத்தியோகத்தர் - உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மட்டக்களப்பு), தேவராசா (வர்த்தகர்), சிவநாதன் (வர்த்தகர்), காலஞ்சென்ற கௌரி, கோமளேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசன் (பிரான்ஸ்), கௌரி நடேசன், செல்வநாயகி தேவராசா, கிருத்திகா சிவநாதன், ம.தேவராசா (லேக்ஹவுஸ்), ஆ.சிவநாதன் (ஆசிரியர், உடுப்பிட்டி மெதடிஸ்த மிஷன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிதரன் நடேசன், அபிராமி நடேசன், சிந்துஜா நடேசன், செந்தூரன் நடேசன், அர்ச்சனா தேவராசா, கிருஷாந்த் சிவநாதன், ஜெகநாத் சிவநாதன், தே.அமுதராஜ், தே.கணேசராஜா, தே.சுபத்திரை, தே.யசோதரை, சி.அபிராமி, சி.ஹரிகரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-08-2002) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருமகள் சோதி வீதி,*
*நெல்லியடி, கரவெட்டி.* (C/23255)

தகவல்:
ஐ.சிவநாதன் - மகன் (மருதம்)

## வஸ்தியாம்பிள்ளை மத்தியாஸ் பொன்னையா

(நெல்லியடி மடுராணி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

அன்னார் செல்வளிவாசா, கரவெட்டி வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவராவார். இவர் 21-08-2002 புதன்கிழமை மாலை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

*கரவெட்டி வடக்கு,*
*கரவெட்டி.* (C/23255)

தகவல்: அருட்சகோதரி
யோலண்ட் மத்தியாஸ் (மகள்)
அதிபர், திருக்குடும்ப கன்னியர்மடம்,
யாழ்ப்பாணம்.

## திருமதி கதிரவேலு ஆச்சிப்பிள்ளை

அளவெட்டி வடக்கு, தம்பாகலட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்பொழுது 192/3, கச்சேரி - நல்லூர் வீதியில் வசித்தவருமான திருமதி கதிரவேலு ஆச்சிப்பிள்ளை அவர்கள் (20.08.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலு (ஓய்வுபெற்ற ஊழியர், சீமெந்துக்கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, சிவனேஸ்வரி(ஜேர்மனி), முருகையா(மிருதங்கம்), யோகேஸ்வரி(ஜேர்மனி), லோகேஸ்வரி(ஜேர்மனி), பிரதீபன்(மாநகரசபை ஊழியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வம், சற்குணராஜா(ஜேர்மனி), கந்தசாமி(ஜேர்மனி), யோக்கர்(ஜேர்மனி), அருந்தவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் துயிலன், கயிதர், உஜிலா, சேதுலன், இராகுலன், பிரியங்கா, பிரவின், ஹரிகரன், லக்ஷன், ஜெலன்ஷன், ஜெனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2002) வியாழக்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*192/3, கச்சேரி-நல்லூர் வீதி,*
*புஸ்பா ஸ்ரோர்ஸ் அருகில்.*

தகவல்:
கதிரவேலு (கணவர்), பிள்ளைகள்.

(7377)

## திருமதி சுந்தரலிங்கம் கமலாதேவி

இணுவில் தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் கமலாதேவி நேற்று (21-08-2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - சின்னம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வியும், சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற இயக்குநர், கணிப்பொருள் கூட்டுத்தாபனம்) அவர்களின் பாசமிகு மனைவியும், கௌரி (லண்டன் - முன்னாள் மனிதஉரிமை ஆணைக்குழு இணைப்பாளர்), இளங்கோவன் (கல்வி இன்பெக்ஸ் பிறைவேட் லிமிட்டெட்), கலைவாணி (யாழ்.பல்கலைக்கழகம்), கீதாஞ்சலி (நூலகர், இணுவில் பொது நூலகம்), சுமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வநாதத்தின் (லண்டன்) பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-08-2002) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, இறுதியாத்திரைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில்.* (C/23258)

தகவல்:
ந.சுந்தரலிங்கம்

## திருமதி மயில்வாகனம் செல்லம்மா (மயிலக்கா)

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கோப்பாய் தெற்கு, நாவலர் பாடசாலை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வில்வம்தோட்டம், வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் செல்லம்மா அவர்கள் நேற்று (21.08.2002) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற S.V.மயில்வாகனத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் ராதா (உபதபால் அதிபர், வதிரி), கீதா (கனடா), நேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகலிங்கம், சண்முகராசன் (கனடா), இந்திரா (கனடா) ஆகியோரின் மாமியாரும் ராகவன் (கனடா), ஷானகி, ஷாமினி கிரிதரன் (கனடா), சர்மிலா, யாழினி (கனடா), ஜனனி (கனடா), ஜெனிஸ் (கனடா), தனிஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.08.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வில்வம் தோட்டம்,*
*வதிரி.* (C/23257)

தகவல்:
ராதா (மகன்)



திருமலைக் கலவரத்தில் இராமகிருஷ்ணர் சிலையின் தலை உடைக்கப்பட்டிருப்பதையும், சேதமடைந்த வாகனங்கள் பொலீஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருப்பதையும், காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுவதையும் படங்களில் காணலாம்.

# திருகோணமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டனர். தாக்குதலுக்கு இலக்கான இளைஞர்கள் ஏனையோரையும் அரங்கிலிருந்து வெளியேறுமாறு சத்தமிட்டனர். அவர்களை அங்கு கடமையிலிருந்த பொலீஸார் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம், அரங்கினுள் நடமாடிக்கொண்டிருந்த பெரும்பான்மை இனக் கோஷ்டிகள் இரண்டுக்கு இடையிலும் மோதல் வெடித்தது.

அரங்கத்தின் முன்னால் வெடித்த மோதல் மேலும் வலுத்து நகரின் பல பகுதிகளுக்கும் பரவியது. கலைத்துக் கலைத்து அடிபட்டுக்கொண்ட கோஷ்டிகள் அனுராதபுரம் சந்தி வரை சென்று சண்டையிட்டன. நடுநிசி கடந்து நேற்று அதிகாலை வரை இடம்பெற்ற மோதல்களில் - சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் இருந்த சில கடைகளும் சூறையாடப்பட்டன. தனியார் பஸ்கள், வான்கள், தனியார் நிறுவனங்கள், கடைகள் என்பவற்றின் மது கல்வீச்சு இடம்பெற்றது. இதனால் அவை பலத்த சேதமடைந்தன.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிலை அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு சென்.ஜோண்ஸ் அம்புலன்ஸ் பயிற்சிப்படை அணியை ஏற்றி வந்த தனியார் பஸ்ஸும் தாக்குதலுக்குத் தப்பவில்லை. அதன் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன.

காயமடைந்தவர்களில் 16பேர் முஸ்லிம்கள்; அறுவர் சிங்களவர்கள்; ஐவர் தமிழர்கள்.

காயமடைந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை கடற்கரையோரத்திலிருந்து மயக்கமான நிலையில் மீட்கப்பட்டார்.

கிண்ணியாவைச் சேர்ந்த எஸ். சஜாத் (வயது19) என்ற மேற்படி இளைஞரின் நிலை மிகவும் மோசமாக இருந்ததால் அவர் பேராதனை ஆஸ்பத்திரிக்கு உடனடியாக அனுப்பப்பட்டார்.

காயமடைந்த ஏனைய முஸ்லிம் இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் கிண்ணியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த ஆறு சிங்களவர்களில் மூவர் பொலீஸார்; இருவர் சிவிலியன்கள்; ஒருவர் பிணையில் வெளிவந்துள்ளவர். காயமடைந்த தமிழர்கள் ஐவருமே சிவிலியன்கள்.

கைதுசெய்யப்பட்ட 18 பேரில் 16 பேர் சிங்களவர்கள்; இருவர் தமிழர்கள் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

போக்குவரத்துச்சபை பஸ்கள் ஏழு, தனியார் பஸ்கள் ஆறு மற்றும் ஓட்டோக்கள், கார்கள் என பல வாகனங்கள் சேதமடைந்தன. நகரில் பல கடைகள் நொறுக்கப்பட்டுள் ளன.

சேதமடைந்த ஒன்பது பஸ்கள் நேற்றுத் திருகோணமலை பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டன. (ம)

## அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அகற்றுவதில் ஈடுபட்டிருக்கும் ஐ.நா. குழுவினரை அவர் சந்தித்துப் பேசுவார். பின்னர் யாழ்.ஆயர் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

மாலையில் கொழும்பு திரும்பும் அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ஆமிடேஜ், அலரிமாளிகையில் பிரதமர் ரணிலைச் சந்தித்து பேச்சு நடத்துவார்.

வெள்ளிக்கிழமை காலை அவர் இலங்கையை விட்டுச் செல்வார்.(ம)

### அம்பாறை மாவட்ட கண்காணிப்புக் குழுவிலுள்ள

# புலிகளின் பிரதிநிதிகளுக்கு வேதனம் வழங்கமுடியாது!

## சமாதானச் செயலகப் பணிப்பாளர் கடிதம்

அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலுள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கமுடியாது என்று அரசு அறிவித்துள்ளது.

அவர்களுக்கான கொடுப்பனவை அவர்களை நியமித்த விடுதலைப் புலிகளே வழங்கவேண்டும் என்று சமாதான நடைமுறையைக் கூட்டிணைப்பதற்கான செயலகப் பணிப்பாளர் நாயகம் பி.ஏ.பி.குணதிலக கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

புலிகளின் பிரதிநிதிகளான இரா. சண்முகநாதன், ஆர்.சௌந்தரராஜா ஆகியோர் பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் மாதவேதனம் தொடர்பாக மகஜரொன்றை கடந்த 30 ஆம் திகதி சமர்ப்பித்திருந்தனர்.

அரசுக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுக்கான கூட்டம் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றபோது அமைச்சர் மிலிந்தமொறகொட பேசுகையில, புலிகளின் பிரதிநிதிகளுக்கு மாதக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார். அதையடுத்தே மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது.

இம்மகஜருக்குப் பதில் அனுப்புமாறு அமைச்சர் மொறகொடவின் செயலாளர் சமாதானச் செயலகப் பணிப்பாளர் குணதிலகவிடம் கோரியிருந்தார். அதன்படி பணிப்பாளர் அனுப்பிய ப்திலில் மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மறியற்போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களுக்கும் பொதுமக்களுக்கும் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் -

சேதமடைந்த கிளைக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் -

இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற அனுமதிக்கக்கூடாது என்றும் - விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக கடற்படை அதிகாரி உறுதியளித்துள்ளதாக சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நாரந்தனையில் உள்ள கடற்படை முகாமை அகற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை கடற்படையினர் ஏற்க மறுத்துவிட்டனர் என்று அவர்கள் மேலும் கூறினர்.(ம-3-16)

## தென்கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வூர், அக்கரைப்பற்று, ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இத்தீவிபத்தால் 4 கோடிமுதல் 5 கோடிவரை நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக ஆரம்ப மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இத்தீவிபத்துக்கு சதி முயற்சி காரணமாக இருக்கக்கூடிய சாத்தியம் இல்லை என்றும் -

மின் ஒழுக்கே காரணமாக இருக்கலாம் எனவும் - ஆரம்பவிசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது என்றும் - கல்முனை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் நெவில் மோசஸ் தெரிவித்துள்ளார். (ம-3-14-12)


**வேலைக்கு ஆள் தேவை**

சமையல் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**றிக்கோ ஹோட்டல்**
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(7302)

**தகவல் தொழில் நுட்பப் பூங்கா**
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி.021-3641 E-mail: itp@sltnet.lk

**அறிவித்தல்**

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் ஆரம்பிக்கப்பட இருக்கும் புதிய கற்கைநெறியான **Diploma in Information Technology** முன்னர் குறிப்பிட்டபடி 26-08-2002 அன்று ஆரம்பமாக இருக்கின்றது என்பதனை அறியத்தருகின்றோம். இக் கற்கைநெறி சம்பந்தமான மேலும் விளக்கங்களுக்கு 24-08-2002 அன்று காலை 10 மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளப்படும்.

- இலகு தவணை முறை
- வார இறுதி விரிவுரை ஆரம்பித்தல்
- கற்கைநெறியில் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கான விளக்கங்கள்.

**திருமறைக் கலாமன்றம்**
வழங்கும்
**ஸ்பாட்டக்கஸ்**
(நாடகம்) (C/23585)
ஒகஸ்ட் 30,31 - செப். 1, 2002
(வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 6.45 மணி.

**வேலைவாய்ப்பு**

கணனியில் ரைப்செற்றிங் செய்யத் தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை.
தகுதியானவர்கள் உரிய ஆவணங்களுடன்
நாளை (23-08-2002) வெள்ளிக்கிழமை
மாலை 4மணிக்கும் 6மணிக்கும் இடையில் நேரில் வரவும்.
ஆளணி முகாமையாளர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/23260)

**திருமண இடம்மாற்றம் பற்றிய முக்கிய அறிவித்தல்**

எமது செல்வங்களான சுகுமார் ஸ்ரீ பத்மாவதி திருமண வைபவம், அழைப்பிதழில் குறிப்பிட்டதுபோல சிறுப்பிட்டி மேற்கு மணமகள் இல்லத்தில் நடைபெற சில வசதியீனங்கள் ஏற்பட்டமையால்,

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில்

குறித்த நேரத்தில் நடைபெறுமென்பதை அன்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ச.விஜயரத்தினம் தம்பதியினர்
சங்கானை.
(7365)
சு.சின்னத்தம்பி தம்பதியினர்
சிறுப்பிட்டி மேற்கு.

**புதுக்கடை திறப்பு விழா**
அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம், ஆவணி மாதம், 06 ஆம் நாள் இன்று (22-08-2002) வியாழக்கிழமை காலை 8.05 மணி தொடக்கம் 10 மணிவரையுள்ள சுபவேளையில்
எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**சொலெக்ஸ்**
மூக்குக் கண்ணாடியகமும்

**லக்ஷ்ஷெறி**
பல்கட்டும் நிலையமும்

(பிரதேச செயலகம் முன்பாக)
என்னும் வர்த்தக ஸ்தாபனத்தை ஆரம்பித்துவைக்க திருவருள் கைகூடியுள்ளது. அஞ்ஞான்றில் நடைபெறும் மங்களநிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் குடும்ப சமேதராய் சமுகந்தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
திரு.ந.சிவகுமார் (சிவா)
232A, கண்டி வீதி,
சாவகச்சேரி.
(C/23248)


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
| --- | --- | --- |
| 06 - 02 - 1937 |  | 02 - 09 - 2001 |

**அமரர் தம்பையா சிவசுப்பிரமணியம்**
(இளைப்பாறிய உப தபாலதிபர்)

கற்றவரும் உற்றவரும் மற்றவரும் கொற்றவரும்
செற்றமின்றிப் போற்றி புகழ்மாலை சூடியவரே!
சுற்றமுற்றும் சூழ்ந்திருக்கும் நெஞ்சங்களில்
நற்றிருவே நயந்துபோற்ற நல்மணியாய் விளங்கினீரே!
ஆண்டொன்று சென்றாலும் உம்உருவம் எம்
நெஞ்சை விட்டகலாதே...!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உம்பிரிவால் துயருறும்:
மனைவி, மகன்.
ஏழாலை மேற்கு,
ஏழாலை.
(7375)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.08.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.